# திராவிடநாடு

விலை அணா 2   ஆண்டுசந்தா ரூ 7   இலங்கை 15 சதம்   மலாய்நாடு 12 காசு

| மலர் 6 | 2—11—47 | இதழ் 23 |
|---|---|---|

## நற்பணி செய்வோம் இன்றே!

[ பெரியதளம் சுப்புராயல் ]

—✲—

எண்ண இயலா இன்னலைச் சகித்து
மண்ணி லிதுவரை மடமையில் மூழ்கி
வாழ்ந்து வந்தனர் வளம் இல்லாது
தாழ்ந்து உள்ளனர் தரித்திர ராயினர்
உழவர் உலகினில் உயர்ந் தோரென
கழலு கின்றோம் காரியம் என்றும்
செய்திட மட்டும் சிந்தை இல்லை
போய்யர் முன்னாளில் புரவல ரிடத்தில்
ஆசை காட்டி அனைத்தும் பறிக்க
வேசியை யோத்த வேடிக்கை செய்தனர்
ஏமாந்த அரசர் எழுதித் தந்தனர்
காமாந்த காரக் கடவுள் பெயரால்
பெற்றனர் இனும் பின்னர் துன்பம்
அற்றனர் அதன்பின் அல்லல் அறியாது
உத்தம உழவரை உழுகச் சொல்லி
அத்தனை செயலும் அழகுற முடியவும்
அறுப்புக் காலம் அண்டின போழ்து
வெறுப்பு இலார்போல் வீணரின் கூட்டம்
மீண்டும், உழவரை மெச்சுதல் விடுத்து
வேண்டும் வேலையை வியர்க்க வியர்க்க
செய்யும் படியாய்ச் செப்புவ ராறல்
செய்வதற் குகந்த சிறந்த கூலியை
உடனே தராமல் உயரிய உழவனிர
மடைய ரென்று மதித்து, மேலும்
கட்டளை யிடுவர் கம்பீர முடனே
கஷ்டப் பட்டுக் கைகால் கடுக்க
நெல்லைச் சுமந்து நேராய்ச் சென்றால்
கொல்லைப் பக்கம் கொண்டு வந்து
உள்ளே குவிக்க உத்தர விடுவர்
கள்ள மில்லாக் கவினுறு உழவர்
உள்ளம் நொந்தது, உலகி லினிமேல்
உழைத்து வாடாது, உழவர் நன்றாய்
தழைத்து வாழ்வ தவசியம் என்றால்
உடனே 'இனும்' ஒழிந்திட யாவரும்
திடமாய் நற்பணி செய்வோம் இன்றே!

# அன்பா அறிவா?

(நக்கீரன்)

காட்டுப் பன்றி ஒன்றினைத், திண்ணன் என்ற ஒரு வேடன் துரத்திச் சென்று, கொன்று, அதன் இறைச்சியை நெருப்பில் வதக்கித், தின்று பார்த்துச், சுவையுள்ள இறைச்சியைத் திருக்காளத்தி மலையில்இருந்த குடுமித் தேவர் என்ற சிவவடிவத்திற்குப் படைத்தான்; வாயிலே முகந்து கொண்டு சென்ற நீரால் அவ்வடிவத்தைக் குளிப்பாட்டினான்; பச்சிலைகளையும் மலர்களையும் தன்னுடைய குடுமியிலே செருகிக்கொண்டு போய்க் குடுமித்தேவருக்குச் சாத்தினான்; முன்பு சாத்தப்பட்டிருந்த மலர்களைத் தன்கால்செருப்பால் நீக்கினான்; காட்டில் வாழும் கொடிய விலங்குகளால் சிவனுக்குத் தீங்கு நேரிடாதபடி காக்கக் கண்துயிலாது விழித்திருந்தான்; காலையில் எழுந்து கடவுளுக்கு இறைச்சி கொண்டு வருவதற்காகக் காட்டுக்குச் சென்றான்.

இந்தச் சமயத்தில், அந்தக்குடுமித் தேவருக்கு ஆகமவிதிப்படி பூசை புரியும் சிவகோசரியார் என்ற பார்ப்பனர் அங்கே வந்தார்; வெந்த இறைச்சியையும் எலும்பையுங் கண்டார்; அஞ்சி அகலமிதித்து ஓடினார்; பின்னர், அவற்றைச் சுத்தம் செய்து, பிராயச்சித்தமும் செய்து முறைப்படி அருச்சித்துத் தமது தபோவனம் போய்விட்டார்.

ஆண்டவனுக்கு இறைச்சி கொண்டு வரச்சென்ற திண்ணனார், பன்றி, மான் முதலிய பல விலங்குகளைக் கொன்று, அவற்றின் இறைச்சியை, முன்னாளினும் அதிக சுவையுள்ளதாகத் தேனுங்கலந்துகொண்டு வந்தார்; முன்போலவே, நீரைவாயிலும், மலரைக் குடுமியிலும் செருகிக்கொண்டு வந்தார்; கால்செருப்பால் பழைய மலர்களை அகற்றினார்; வாய் நீரால் குளிப்பாட்டினார்; தேன் கலந்த இறைச்சியைத் தின்று சுவை பார்த்துச் சுவாமிக்குப் படைத்தார்.

நாட்கள் ஆறாயின; சிவகோசரியார் அவ்வடாத செயலைக்கண்டு, "இக்கொடுமை செய்தாரை உன்னருளாலேயே ஒழித்தல் வேண்டும்" என்று ஆண்டவனிடம் முறையிட்டார்; ஆண்டவன் சிவகோசரியார் கனவிலே தோன்றி, "அவன் என் அன்பன், அவனுடைய செயல்கள் எல்லாம் நமக்கு இனிய செயல்களாகும், நீ நாளை நமக்குப் பின்பக்கத்தில் ஒளித்திருந்து அவன்தன் அன்புச் செயலைக்காண்" என்று கூறி மறைந்துவிட்டார்.

மறுநாள், குடுமித்தேவர் (சிவன்) தமது வலக்கண்ணினின்றும் குருதி (இரத்தம்) பெருகச் செய்தார்; அதனைக்கண்ட திண்ணனார், தமக்குத் தெரிந்த பச்சிலைகளைப் பறித்துவந்து சாறெடுத்துக் கண்ணில் வார்த்தார்; குருதி நிற்கவில்லை; 'ஊனுக்குஊன்' என்ற பழமொழி அவருடைய நினைவுக்கு வரவே, திண்ணன், அம்பால் தமது வலக்கண்ணை அகழ்ந்தெடுத்து ஐயன் கண்ணில் அப்பினார். குருதி நின்று விட்டது; சிறிது நேரத்திற்கெல்லாம் சிவன் தமதுஇடக்கண்ணிலும் உதிரம் பெருகும்படிசெய்தார்; அதனைக்கண்ட திண்ணன், "மருந்து கண்டு கொண்டேன்" என்று மகிழ்ந்து, அடையாளத்தின் பொருட்டுக் காளத்திநாதர் கண்ணில் தமது செருப்பணிந்த இடக்காலை ஊன்றிக்கொண்டு, தமது இடக்கண்ணைத் தோண்ட அம்பை ஊன்றினார்; உடனே அருட்பெருங் கடலாகிய காளத்தியப்பர் மனந்தாளாதவராய், "கண்ணப்பநிற்க! கண்ணப்பநிற்க!! கண்ணப்ப நிற்க!!!" என்று மும்முறை கூறிக்கொண்டே, திண்ணனார் கையைப் பிடித்துத் தடுத்து, "மாறிலா அன்பனே! என் வலப்பக்கத்தில் இருக்கக் கடவாய்" என்று அருள்புரிந்தார். இது, பெரிய புராணத்தில் வரும் கண்ணப்பநாயனாரைப் பற்றிய வரலாறாகும்,

இவ்வரலாற்றில் பேசப்படும் திண்ணன், சிவனாருடைய உணவு, இறைச்சிதான் என்று கருதிப், பன்றி மான் முதலிய விலங்குகளைக் கொன்று படைத்தான் என்று கூறப்படுவது, சைவ ஆகம முறைப்படி செய்யக்கூடாதகாரியமாகும். ஆனால் செய்யப்பட்டதாகச் சேக்கிழாரே கூறியுள்ளார். சேக்கிழார் கூறியபின்னர், அதனைச் செம்மையற்ற செயல் என்று செப்புவது தப்பென்று கருதிப் போலும், ஒன்றன் உயிரைக் கொன்று அதன் ஊனைத்தின்னா அன்புநெறியில் நிற்கும் சைவமெய்யன்பர்களும் அது குறித்த தமது கருத்தைவெளியிடாதுவாளா இருந்துவிட்டனர்! இது, சேக்கிழார் மீது அவர்கள் கொண்டுள்ள மாறா அன்பினைக் காட்டும் அறிகுறியாகும் என்று நாமும் வாளா இருந்துவிடலாம்.

ஆனால், ஒன்றினை ஆராய்ச்சி செய்வதன் வாயிலாக அதன் உண்மையை நடுநின்று விளக்குவோர், ஒருதலைப்பட்சம் கொள்வதோ அன்றி, உண்மை தெரிந்தும் அதனை உரையாமல், ஒருவருக்காக வாளா இருப்பதோமுறையாகாது. எனவே, திண்ணன் என்ற வேடன் திருக்காளத்தியப்பருக்கு ஏன் இறைச்சியைப் படைத்தான் என்பதற்குரிய காரணத்தை முதலில் விளக்கி மேற்செல்வாம். திண்ணன் ஒருவேடன்—காட்டில் வாழ்பவன்—அவன் உண்பது இறைச்சி—நாட்டில் வாழும் மக்களைப்போல் இரண்டுங்கெட்ட கதம்ப வாழ்வு நடத்தத் தெரியாதவன். எனவே, தன்னுடையவாழ்க்கை முறைப்படி, தான்உண்ணும் இறைச்சியே தான் வழிபடும் கடவுளுக்கும் உரிய உணவாகும் என்று கருதி அவ்விதம் செய்திருக்கக் கூடும். அதில் தவறொன்றுமில்லை. ஆனால், தான் உண்ணும் இறைச்சியையே சிவனும் உண்பார் என்பது அவனுக்கு எப்படித் தெரிந்தது?

திண்ணன் மலை உச்சிக்குப் போய் அங்கிருந்த குடுமித் தேவர் என்ற சிவனைப் பார்த்த பின்னரே, அவருக்கு இன்னதுசெய்யவேண்டுமென்பது தெரிந்ததாகச் சேக்கிழார் கூறியுள்ளார் அதாவது,

> "...........குளிர்ந்த நீர் இவரை
> ஆட்டி, ஒன்றிய இலைப்பூச்
> சூட்டி ஊட்டி முன்பறைந்
> தோர் பார்ப்பான், அன்றிது
> செய்தான்..........."

என்று திண்ணனோடு வந்த நாணன் என்ற வேடன் முன்பொருமுறை திண்ணனாரின் தந்தையோடு வேட்டைக்கு வந்த சமயம் பார்த்ததாகச் சொன்ன பின்னரே, சிவனைப் பூசிக்கும் முறை இன்னதென்பது திண்ணனுக்குத் தெரிந்ததாகக் கூறப்படுகின்றது. எனவே, தான் நேரில் பார்த்ததையும் நாணன் சொன்னதையும் கொண்டு "இவைகளே இறைவனார்க்கு இனியவை போலும்" என்று கருதி அவ்விதம் செய்தார் என்று கூறப்படுகின்றது.

இனி, நீரும்—இலையும் — பூவும் இறைவனார்க்கினிய பொருள்கள்

(5-ம் பக்கம் பார்க்க)

# எப்படிச் சகிப்பது?

ஜெமீன்தாரர்களுக்குத் தரப்படும் நஷ்டஈடு, போதாதாம்! இன்னும் தாராளமாக, அவர்கள் விஷயத்திலே நடந்துகொள்ள வேண்டுமென்று, காங்கிரஸ் மேலிடம், தாக்கீது பிறப்பித்துவிட்டது!

இங்கேயோ, பத்திரிகைகள் எல்லாம், பொறிபறக்க எழுதின—நாட்டுமக்களின் உழைப்பை உறுஞ்சிக்கொழுத்த ஜெமீன்தாரர்களிடம், அதிகமான அக்கரை காட்டுவது கூடாது என்று.

பல பத்திரிகைகள் — [காங்கிரஸ் பற்றுள்ளவை] 10 கோடி நஷ்டஈடு தருவது அக்ரமம் என்றுஎழுதின.

பல, மாநாடுகளிலே, நஷ்டஈடு தரவே கூடாது, என்று காங்கிரஸ்காரர்களே தீர்மானங்கள்நிறைவேற்றினர். காங்கிரஸ் பிரசாரகர்களோ, ஜெமீன்தாரர்களை ஒழித்துவிட்டு மறுவேலை பார்க்கிறோம் என்றுகுரலை உயர்த்தி உயர்த்திப்பேசினர். கடைசியில், காங்கிரஸ்மேலிடம் கட்டளை பிறப்பிக்கிறது, தாராளமாகப்பணம் கோடு! என்று. பத்துக்கோடி,போதாதாம்! ஏழைகளைக் காப்பாற்றும் தலைவர்களின் போக்கு இவ்விதமாகவா இருப்பது!

பல தலைமுறைகளாகப், பாடுபடாமல், வாழ்ந்துவந்த ஜெமீன்தாரர்களுக்குப்,பத்துக்கோடிபோதாதாம்!! இன்னமும் கொட்டிக்கொடுக்க வேண்டுமாம்.

இப்படி ஏராளமான பணத்தைக், கோடி கோடியாக, நஷ்டஈடு கொடுத்து, ஜெமீன்தாரர்களைக், கொழுக்க வைப்பது நியாயமா?

மக்கள் தலையிலே, இந்தப்புதுச் சுமையை ஏற்றுவது சரியா? பத்துக்கோடிக்குமேல் பணம் கொட்டிக் கொடுத்துவிட்டு, இந்த ஜெமீன்களைப்பெறுவதுதான், சமதர்மமா!

இந்தப்பணத்தைக்கொண்டு, காடு மேடுகளைக்கூடப் புதியவயல்களாக்கி விடலாமே. ஏன், இவ்வளவு பயம், காட்டு ராஜாக்களிடம்!

நாட்டை ஆளவந்தவர்களுக்கும் காட்டு ராஜாக்களுக்கும், ஏன் இந்த நேசம் ஏற்பட்டது! இதற்கு,ஜெமீன் ஒழிப்பு என்று பெயர் கூறுவதைவிட, ஜெமீன்தாரர்களின், பண முடையைத்தீர்க்கக், காங்கிரஸ் சர்க்கார் செய்யும் உதவி, என்று ஏன், சொல்லக்கூடாது. பொருத்தமாக இருக்குமே! காங்கிரஸ் தலைமை, மேலிடம், இப்படித்தான், பணக்காரர்சார்பாக இருக்கும், என்றுநாம் கூறுவதிலே, என்ன தவறு இருக்கிறது.

“ஒரு பலாத்காரப்புரட்சி ஏற்பட்டிருக்குமானால், இந்த ஜெமீன்தாரர்கள், மடாதிபதிகள், ஆகியோர் உயிரோடாவது தப்பி இருப்பார்களா?” என்று நண்பர் சிவஞானம் ஒரு மாநாட்டிலே பேசும்போது கேட்டார்.

நிச்சயமாகத் தப்பமாட்டார்கள். அதுகூடவேண்டாம். உண்மையிலேயே, ஏழைகளின் நன்மைக்காகவே ஆட்சி நடத்தும் சர்க்கார்இருந்தால், இப்படி, ஜெமீன்தாரர்களுக்குப், பத்துக்கோடி தருவது கூடப் போதாது, மேலும் தாராளமாகத் தரவேண்டும், என்று கூறுமா? நேதாஜி பேர்கூறி, ஜெயபிரகாஷ்பெயர் கூறி, அருணாவின் பெயர் கூறி, கம்யூனிஸ்டுகளின் போக்கையும் திராவிடர்கழகத்தின் போக்கையும் ஒரு சேரக்கண்டிக்கும், தீவிரவாதம் பேசும் காங்கிரஸ் நண்பர்கள், காங்கிரஸ் மேலிடம், ஜெமீன்தாரர்களிடம் காட்டும் கருணைக்கு, என்ன சமாதானம்கூறப்போகிறார்கள். நமக்கல்ல—தங்கள் நெஞ்சுக்கு. பழைய ஏடுகளை மீண்டும் படித்துப்பார்க்கட்டும், பத்துக்கோடி நஷ்டஈடு தருவதே அதிகம்— நஷ்டஈடு ஏன் தரவேண்டும், என்றெல்லாம், பேசியவைகள், எழுதியவைகள்,ஏராளமாக இருக்கும்.

இவ்வளவும்,ஒரேநாள்பேட்டியிலே தகருகிறதே!! பித்தாபுரமும், இராமநாதபுரமும், பொப்பிலியும் விஜயநகரமும் காங்கிரஸ் மேலிடத்தை ஒரேநாள் பேட்டிகண்டு, தங்கள் பக்கம் ‘ஜெயம்’ உண்டாகும்படி செய்துவிட்டார்களே! இவ்வளவு காலமாக ஜெமீன்தாரர்களின் பெயரைக்கேள்விப்பட்டாலே, கடுகடுத்து வந்தகாங்கிரஸ் மேலிடம், ஏன், இப்போது, ஏழையின் குரலை மதிக்க மறுத்து, இன்னும் சற்றுத்தாராளமாக நஷ்டஈடு தரவேண்டும் என்று கூறுகிறது?

ஜெமீன்முறை ரத்து ஆவதால், இந்த ஜெமீன்தாரர்கள், அடையப் போகும் கஷ்டம் என்ன?

ஏராளமாகச் சொந்த நிலம் இருக்கிறது.

மாடமாளிகைகள் உள்ளன. மணி அணிக்குவியலும் உள்ளன. பலருக்கு, ‘வருமானம்’ தரும் வேறு வியாபாரமும் உண்டு.

இவ்வளவும் போதாதென்று, இப்போது ‘ரொக்கம்’ தருகிறார்கள், அதுவும் பத்துக்கோடி போதாதாம்!!

இவ்வளவு தாராளமாக, ஜெமீன்தாரர்களிடம் நடந்துகொள்ளவேண்டிய அவசியம் என்ன?

காங்கிரசிலே, தீவிரமான திட்டம் இருக்கிறது என்று, நம்பிய, அதே நம்பிக்கையுடன் பேசிய நண்பர்கள், இந்தத் ‘தாராள மனப்பான்மைக்கு’ என்ன காரணம் காட்டப் போகிறார்கள்?

ஏற்கனவே, பொருளாதார நிலை சீர் குலைந்திருக்கிறது. மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்துக்கான காரியங்களுக்குப் போதுமானபணம் இல்லை. இந்த நிலையில், ஜெமீன்தாரர்களுக்குத்தாராளமாகத்தரவேண்டும் என்று காங்கிரஸ் மேலிடம் கூறுகிறது! ஏன், காங்கிரசிலுள்ள, முற்போக்காளர்கள், இந்த அக்ரமத்தைத் தடுக்கக் கூடாது? “ஜெமீன்தாரர்களின் நிலைமை, எங்களுக்கு நன்றாகத் தெரியும்—அவர்களுக்குத் தருவதாகச் சொல்லப்படும் பத்துக் கோடி ரூபாயே அதிகம். மேலும் கொட்டித்தரச் சொல்வது அநியாயம். இதை நாங்கள் ஏற்கமுடியாது” என்று, ஏன் துணிவுடன் கூறக் கூடாது? காங்கிரஸ் மேலிடத்தின் தாக்கீதுகளின்படி நடந்து கொள்வதுதான், ஆட்சி முறையாக இருக்க வேண்டும் என்றால், நிலைமையை உணராததாலேயோ, முதலாளித்துவத்தின் மனதை நோகச் செய்யக் கூடாது என்பதனாலேயோ, காங்கிரஸ் மேலிடம், இப்படிப்பட்ட, அநியாயத் தீர்ப்புகள் அளிப்பதையும் கூடச் சகித்துக் கொள்வதுதான், ஆட்சிமுறை என்றால், இங்கே ஏன் ஓர் மந்திரிசபை, அது அமர ஒரு

(19-ம் பக்கத்தில்)

# ஊரார் உரையாடல்

—⊛—

கிருஷ்ணன்—மந்திரமென்பதே உலகத்தில் இல்லை என்று நீர் சொல்வதாய்க் கேள்விப்பட்டேன்; அது உண்மைதானா?

ராமன்—ஆம்! அது உண்மைதான்.

கிருஷ்ணன்—ஏன் இந்தவிவகாரத்தில் தலையிட்டுக்கொண்டீர், உலகிலுள்ள எல்லோரும் மந்திரமிருப்பதாகவும், அதற்கு அநேக சக்தி இருப்பதாகவும் சொல்லும்பொழுது நீர் மாத்திரம் இல்லையென்று சொன்னால் எல்லாருடைய மனமும் புண்படுமல்லவா?

ராமன்—அநேக நாட்களாக மந்திரக்காரர்கள் பாமர மக்களை ஏமாற்றி "நான் அது செய்கிறேன், இது செய்கிறேன்; உமது எதிரிகளைக் கொன்றுவிடுகிறேன், கால் கை வராமல் செய்து விடுகிறேன், மிட்டாய் தருவித்துக்கொடுக்கிறேன், ரூபாய்கள் தருவித்துத்தருகிறேன்" என்று மக்களிடம் ரூபாய்களைக் கொள்ளையடித்து ஓட்டாண்டிகளாக்கி கொண்டு திரியும் புரட்டர்களிடமிருந்துமக்களைத்தப்புவிப்பதற்கும், இதுகாறும் பொருட்களையும் நாட்களையும் அறிவையும் இழந்து புண்பட்டிருப்பதை ஆற்றுவதற்கேயன்றிப்புண்படுத்தவல்ல. இதுவும்நான்மாத்திரம்புதிதாகச்சொல்லிவிடவில்லை. சுயமரியாதைக்காரர் யாவருமே சொல்லுவார்கள்.

கிருஷ்ணன்—யாராவது மந்திரம் செய்து ருசுப்படுத்தி விட்டால்?

ராமன்—இல்லாததை இல்லை என்று சொல்லுகிறேனேயொழிய இருப்பதைப் போய்விடச் சொல்லி நான் சொல்லவில்லை. இருக்குமானால் சந்தோஷந்தான், அன்று முதலே மந்திரங்களைக் கற்றுக்கொண்டு என் விரோதிகளின் மீது பிரயோகித்து அவர்களைப் பிழைக்க விடாமல் ஹிம்சித்து ரூபாய்களை தருவித்துக் கொண்டு பணக்காரனாய் விடுவேன்.

கிருஷ்ணன்—மந்திரத்தினால் தருவித்துக்கொள்ளும் பணம் மூன்றே முக்கால் நாழிகைதான் இருக்குமாம்.

ராமன்—அவ்வளவு நாழிகை இருந்தால் போதும். அதற்குள்ளாக பாங்கில் கொண்டுபோய்ப் போட்டு ரசீது பெற்றுக்கொள்வேன். அதற்குப் பின்னால் பாங்கிலிருக்கும் ரூபாய்கள் தானே காணாமற் போய்விடும்-அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை.

கிருஷ்ணன்— மந்திரக்காரர்கள் இதைச்செய்து காட்டுவதற்குப்பயப்படுகிறார்கள். ஏனென்றால் கவர்ன்மெண்ட் விரோதமென்றும், ஊரார் பல்லைத்தட்டி விடுவார்களென்றும், மற்றும் ஏதேதோ சொல்லுகின்றார்கள்.

ராமன்—அவர்கள் அப்படித்தான் சொல்லுவார்கள். சட்டியில் இருந்தாலல்லவோ அகப்பையில் வரும். என்றாலும் பெரிய காரியம் ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. மந்திரத்தினால் ஒரு சிறிய பொருள் வைத்த இடத்தைவிட்டுச்சிறிது நகர்ந்தாலும் நமக்குப் போதுமானது. இதற்குக் கூடவா கவர்ன்மெண்டார் பிடித்துக் கொள்வார்கள்? ஊரார்பல்லைத்தட்டி விடுவார்கள்? உண்மையிலேயே மந்திரக்காரர்கள் பயந்தால் மாந்திரீகப் புஸ்தகம் போடுவது, மோடிவைப்பது, பாடம் போடுவது, பேயோட்டுவது, முதலியவைகள் கவர்ன்மெண்டுக்கு விரோதமாகாதா?

கிருஷ்ணன்—ஆனாலும் சில மந்திரவாதிகள் ஆகட்டுமென்றுதான் சொல்லுகிறார்கள்.

ராமன்—வாயில் சொன்னால் போதுமா? நேரில் காட்டவேண்டாமா? இன்றைக்கு நாளைக்கு என்பது இல்லை என்பதற்குத்தான் அடையாளம்.

கிருஷ்ணன்—மந்திரம் கால் மதி முக்கால் என்று ஆன்றோர் சொல்லியிருப்பதைப்பார்த்தால், கொஞ்சமாவது இருப்பதாகத்தானேதெரிகிறது.

ராமன்—அப்படியானால்'மந்திரத்தால் மாங்காய் விழாது' என்று ஆன்றோர் சொன்னதை மாத்திரம் ஏன் மறந்துவிட்டீர்?

கிருஷ்ணன்—மலையாளத்தில் மந்திரக்காரர் அதிகமென்று சொல்லுகிறார்களே.

ராமன்—ஆம் அப்படித்தான் சொல்லுவார்கள். அவ்விடம்போய்க் கேட்டால், இவ்விடம் விசேஷமாக இல்லை, திருநெல்வேலிப்பக்கம் அதிகமென்று சொல்லுவார்கள், அவ்விடம் போய்க்கேட்டால்பொம்ம சமுத்திரமெனுமூரில் அதிகமென்பார்கள். இது தெரிந்த விஷயந்தானே.

கிருஷ்ணன்—ஆனால் மந்திரக்காரர்களுக்கே மந்திரம் சந்தேகமென்கிறீர்களா?

ராமன்—அவர்களுக்கு மந்திரத்தின் மீது சந்தேகமில்லை. ஒவ்வொருவரும் 'நமக்குத்தான் தெரியவில்லை, குருநமக்குச்சரியாய்ச்சொல்லவில்லை, இன்னும் அநேகருக்குத் தெரியும்' என்று நினைத்திருக்கிறார்கள்.

கிருஷ்ணன்—எவ்வகையிலும் ருஜுப்படுத்த முடியாவிட்டால் மந்திரமில்லையென்றுதானே ஒப்புக் கொள்ளவேண்டும்.

ராமன்—வாஸ்தவந்தான், அப்படி ஒப்புக்கொள்ளுவார்களென்று நான் நினைக்கவில்லை.

கிருஷ்ணன்—ஏன்?

ராமன்—"எத்தனையோ பேர் கெட்டிக்காரர்கள் இருப்பார்கள், நமக்குத் தெரியவில்லையே ஒழிய வேறில்லை. "மந்திரம் தெரிந்தவர்கள் தெரியும் என்று வெளியில் வருவார்களா" என்று சொல்லிவிடுவார்கள்.

கிருஷ்ணன்—அப்படியே எண்ணிவிட்டால் உண்மையைத் தெரிவது தான் எப்படி?

ராமன்—உதாரணமாக வாதபித்தசிலேத்தும குணவித்தியாசத்தினால் யாருக்காவது கால் கை வீங்கிக் கொண்டால், அவ்வூரில்மந்திரக்காரனென்று இருப்போனைப் பிடித்து வந்து "நீ தான் மந்திரம் செய்து இப்படிச் செய்து விட்டாய்" என்று யாராவது நன்றாய் உதைகதுப்பல்லை தட்ட ஆரம்பித்தால்அவன் "ஐயோ சிவனே நான் ஒன்றும் செய்யவில்லையே! எனக்கு மந்திரமென்பதே தெரியாதே" என்று அழஆரம்பித்து விடுவான், அப்போது மந்திரக்காரன் யோக்கியதை தெரிந்து போகுமல்லவா?

✱

## நினைவுக்கல்

காலஞ்சென்ற போராசிரியர் M. L. பிள்ளை அவர்களின் நினைவுக்குறியாகத், திருநெல்வேலியில், மந்திரி பக்தவச்சலம் அவர்களால் 13-10-47-ல் நினைவுக்கல் நாட்டப்பட்டது.

## அன்பா அறிவா?

2-ம் பக்கத் தொடர்ச்சி

என்பது நாணன் கூறியதாலும், தான் நேரில் பார்த்ததாலும் தெரிந்து அதன்படி திண்ணனார் செய்தார் என்பது உண்மையானால், நாணனால் கூறப்படாததும் தன்னால் நேரில் பார்க்கப்படாததுமான இறைச்சியை இறைவனுக்கு உணவாகப் படைத்திருக்கவே மாட்டார். தான் உண்ணும் இறைச்சியையே இறைவனும் உண்பான் என்று திண்ணனார் கருதியிருந்தாரானால், இறைவனை அருச்சிக்கும் முறையையும் தன்னுடைய முறைப்படியே அதாவது வேடர்கள் கடவுளை அருச்சிக்கும் முறைப்படியே இந்தக் குடுமித்தேவரையும் அருச்சித்திருப்பார். ஆனால், அவர் அவ்விதம் செய்யவில்லை, கடவுளுக்குப் பச்சிலையும், பூவும், நீரும் உகந்த பொருள்கள் என்பது,

> "திருக்காளத்தி நாயனார்க்கினிய செய்கை, எண்ணிய இவை கொலாம் என்றிது கடைப்பிடித்து"

என்ற சேக்கிழார் கூற்றுப்படி, குடுமித்தேவரை அருச்சிக்கும் முறை திண்ணனாருக்குத் தெரியாதென்பதும், மலைஉச்சிக்குப் போய்ப்பார்த்த பின்னரே அதனை அவர் தெரிந்துகொண்டார் என்பதும் புலனாகின்றது. எனவே, திண்ணனார், தாம் உண்ணும் இறைச்சியே இறைவனுக்கும் இனிய உணவாகும் என்று கருதி அங்ஙனம் செய்தார் என்பது பொருந்தாக் கூற்றாம்.

இனி, அவர் அங்ஙனம் செய்தது அவருடைய குலமுறைப்படி தவறாகாதென்றே வைத்துக்கொள்வோம். ஆனால், கடவுளின் திருமஞ்சனத்திற்குரிய நீரைத் தம்முடைய வாயில் முகந்து கொண்டுவருவதும், இறைவனார்க்குரிய இறைச்சியைத் தம் வாயால் அதுக்கிச் சுவை பார்த்துப் படைப்பதும், சிவனுக்குச் சாத்தப்பட்ட மலரைத் தம் கால் செருப்பால் அகற்றுவதும் வேடர்குல முறைப்படி செய்யப்படும் காரியங்கள் என்று எவரும் கூறமாட்டார்களே! எந்த நாகரிக மற்றகாட்டுமிராண்டிக் குலத்தவரும் இந்தக்காரியத்தைச்செய்யவே மாட்டார்கள். அதிலும், கடவுள் ஒருவர் உண்டு, அவரை வழிபடுவதே மக்களாய்ப் பிறந்தோர் கடன் என்பதைத் தெரிந்துகொள்ளும் அளவுக்கு 'அறிவு' படைத்த எவரும் இந்தக் காரியத்தைச் செய்யக் கனவிலும் நினையார். கடவுளை வழிபடவேண்டுமென்று அறிந்தவர்கள், அவரை வழிபடும் முறையையும் அறிந்தே இருப்பர். ஒரு ஊருக்குப் போக வேண்டியவன், அந்த ஊருக்குப் போகும் வழியையும் தெரிந்துதானே போவான்—போகவேண்டும். அங்ஙனமன்றி வடக்குநோக்கிப் போகவேண்டியவன் தெற்கு நோக்கிப்போவானா? கடவுளை வழிபட விரும்பியவன், அவரை வழிபடும் முறையை அறியாது, அதற்கு நேர்மாறான முறையைக் கையாண்டால், கடவுளை வழிபடுவதாலாய பயனை அவன் அடைந்து விட்டான் என்று கூற முடியுமா? "அற்றன்று நீ கூறுவது பொருந்தாது; கடவுளை வழிபட விரும்புவோர் அவரவர் விருப்பப்படியும், அவரவர் நிலைக்கேற்பவும், அவரவர் அறிந்த அளவிலும் வழிபடுவர், அதுவே முறை அங்ஙனம் செய்வதால் பெறப்படும் குற்றம் யாதும் இல்லை" என்று சிலர் கூறுவரேல், அதனை நாமும் வரவேற்கின்றோம். காரணம்: ஒரு கடவுள், தன்னை வழிபடுவதில் கட்டுப்பாடோ வரம்போ இருத்தல் கூடாதென்றும், தன்னை வழிபடுவது அவரவர் மனநிலையையும்-விருப்பத்தையும்-தேவையையும்—அவசியத்தையும் பொறுத்ததென்றும், தன்னை இன்னார்தான் இன்ன முறைப்படி வழிபடலாம்—மற்றையோர் வழிபடக் கூடாதென்று கூறுவது குற்றமென்றும், தனக்கு இன்னது தேவை—அதனைத்தந்தாகவேண்டுமென்று கட்டாயப்படுத்தாததும்; ஆயிரமாயிரம் மக்கள் தங்களுக்குக் குந்தக் குடிசையும்—குடிக்கக் கஞ்சியும்-உடுக்கக் கந்தையும் இல்லாதுதவிக்கும் ஒரு நாட்டில், தனக்குமட்டும் வானத்தை முட்டும் கோட்டை போன்ற கோயிலும் — சர்க்கரைப் பொங்கலும், தேனும், பாலும், பழமும், பன்னீரும், சந்தனமும்—பட்டும், பீதாம்பரமும் நவரத்தினமும்—வெள்ளிவாகனமும், தங்கப் பல்லக்கும்-தேரும், திருவிழாவும் வேண்டுமென்று கேட்காததுமான ஒருகடவுள், ஆணாய்—பெண்ணாய்—அனலாய் — புனலாய்-காற்றாய்-வானாய்-மண்ணாய்-மலையாய் இருக்கட்டும். அப்படிப்பட்ட ஒருகடவுளை வேண்டாமென்று யாரும் கூறவில்லை.

(தொடரும்)

## பெருமாளும் பிச்சைக்காரரும்

6-ம் பக்கத் தொடர்ச்சி

கள்தான்! பார்ப்பனருக்கு, அதாவது பஞ்சத்தாலோ, ஏழ்மையாலோ வேலையில்லாத்திண்டாட்டத்தாலோ, அங்க அவலட்சணத்தாலோ கஷ்டப்படாத பார்ப்பனர்களுக்கு, தேவதா பூஜைக்குப் பிறகு, வெண் பொங்கலும் சர்க்கரை அக்கார வடிசிலும் ததியோதனமும் புளியோதரையும் தந்துவருவதை நிறுத்திவிட்டு அதைவிட சாதாரணமான பிரசாதத்தை பிழைக்க வழியற்றவர்களுக்குத் தந்தால் நல்லதுதானே! சீரங்கம் கோயிலில் பிரசாத வகையறாவுக்கு எவ்வளவு இப்போது தள்ளபட்ஜட்படி செலவாகிறதோ அந்தத் தொகைக்கு ஏற்றபடி, சீரங்கம்கோயிலில் திருச்சி ஜில்லாவிலுள்ள பிச்சைக்காரர்களில் உழைத்துப் பிழைக்க முடியாத நிலைமையில் உள்ள ஐயாயிரம் பிச்சைக்காரர்களுக்குச் சோறிட்டுக் காப்பாற்றினால் நல்லதாகாதா? அவர்களுக்கு வேண்டுமானால் இரண்டு திருப்பாவை சொல்லிக்கொடுத்துவிடட்டும். திருப்பாவை பாடிய பிறகு 'துளசியும் தீர்த்தமும்' பிழைக்க வசதியுள்ள பக்தர்கள் பெறட்டும். பிரசாதம், பிழைக்கவழியற்ற பேர்வழிகளுக்குத் தரப்படட்டும். ஏன், என் யோசனையைக் கேட்டால் பள்ளிகொண்டிருக்கும் ரங்கநாதர் திடுக்கிட்டு எழுந்து 'இது கூடாது' என்று கூறுவார் என்றா கருதுகிறீர்கள்? இன்று அந்தப் பிரசாதத்தை நம்பி வாழும் பார்ப்பனர் பதைப்பர். ரங்கநாதர் என் பக்கந்தான் பேசுவார்; பேசும் வழக்கத்தை அவர் இப்போது கைக்கொள்வதாக இருந்தால்.

✽

## ரஷிய நெல்

அதிகமான நீர்ப்பாய்ச்சல் தேவையில்லை; எந்தவிதமான பருவமானாலும் பாதகமில்லை, ஆண்டு முழுவதும், எந்தக் காலத்திலும் பயிராகக்கூடியது; உருண்டையாக இருக்கும், தஞ்சாவூர் சிறுமணி போல இருக்கக்கூடிய ரஷியநாட்டுநெல், இப்போது, சென்னை சர்க்காரால், ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது. இந்த நெல் விதை போடப்பட்டு, முளை வந்துவிட்டதாம். இந்தப்பயிரின் வளர்ச்சியை சர்க்கார் கூர்ந்து கவனித்துக்கொண்டுள்ளனர். இந்த ஆராய்ச்சி வெற்றிகரமாக நடைபெற்றுவிட்டால், புதுவிதமான பயனுள்ள நெல், பயிரிட வசதி ஏற்படக் கூடும்.

# ★ பெருமாளும் பிச்சைக்காரரும்! ★

“அட! பாவிப் பிராம்மணா! உனக்கா 27 குழந்தைகள். நம்ப முடியவில்லையே. ஒரு குழந்தையை வைத்துக்கொண்டே குடும்பத்தை நடத்தவே முடியாது நான் திண்டாடுகிறேன். 27 பிள்ளைகளை நீ எப்படி வளர்க்கிறாய்” என்று துவாரகையில் அரண்மனை வாயில் கார்ப்போன் கிருஷ்ணனைக் காணவந்த குசேலனைக் கேட்டதாகப் புராணம் கூறும்.

27 மக்கள் பசித்து மெலிந்துபடும் பாடு கோரம். இதனைப்போக்க உமது பள்ளி நண்பர் கிருஷ்ணனிடம் சென்று உதவி கோரும் என்று குசேலரின் மனைவி கூறி அவரைத் துவாரகைக்கு அனுப்ப கண்ணன் குசேலரைக் கோடீசுவரர் ஆக்கிவிட்டார் என்றும் புராணம் கூறும். உதவி செய்த கண்ணனோ, புராணக் கதை கேட்டு உள்ளம் பூரித்து கோவிந்த நாம சங்கீர்த்தனம் கூறும் பக்த கோடிகளோ, 27 பிள்ளைகள் குசேலருக்கு என்றால் முதல்பிள்ளை 27 வயதான ஆடவனாகஇருப்பானே வேலை செய்யக் கூடிய பருவ மக்கள் இந்த 27-ல் கடைசி ஐந்தாறு குழந்தைகள் தவிர மற்றவை, வேலைசெய்யக்கூடிய பருவமானவர்களாகத்தானே இருப்பர், அவர்கள் ஆளுக்குக் கொஞ்சம் சம்பாதித்தாலும், குடும்பத்திலே பஞ்சம் ஏன் வரப்போகிறது, வேலையே கிடைக்காதுபோனால் உஞ்சிவிர்த்தி செய்தாலும், குசேலர் கஷ்டப்படத் தேவையில்லையே? ஏன் அந்தப் பிள்ளைகள் சும்மா இருந்தனர்? இருபத்திஎழும்மாதொட்டியிலே கிடந்தன! என்று கேட்கவில்லை புராணம் புளுகு என்று இருந்தனர் போலும்!

* * *

27 மக்களைப் பெற்றதற்காக மகிழ்ந்தோ என்னமோ குசேலருக்கு கண்ணன் செல்வத்தை வாரிவாரித் தந்தார் குடும்பம் பெரிதாகி, பிள்ளைகுட்டிகள் பாடுபடும்போது பெற்றோர் மனம் குசேலோபாக்கியானத்தின் மீது பாயும். ஆனால் கண்ணனுக்கு இந்தக் காலத்துக் குசேலர்கள்மீது அன்பு பாய்வதில்லை. அவருக்கு எத்தனையோ ஜோலி! போய்ப்பார்த்துக் கேட்டால்தானே! பார்ப்பது ஏது! இது கலிகாலமாயிற்றே என்பார்புராணீகர். உண்மைதான்! அந்தக் காலமுதற் கொண்டு இன்றுவரை, “கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர்.”

* * *

குசேலர் போல் இல்லையானாலும் சிறு குடும்பங்களும், குடும்பமே இன்றித் தவிக்கும் பேர்வழிகளும், வேலை வெட்டி இன்றி, சோறு கஞ்சியின்றி, கந்தையும் போதுமான அளவு இன்றி இருக்கிறார்களே, அவர்களைக் காப்பாற்ற ஒரு அவதாரம் எடுக்கக் கூடாதா? பாவம்! விஷ்ணுவையும் தொந்தரவு செய்வதற்கில்லை, அவர் பல அவதாரங்கள் எடுத்து, பாடுபட்டு அலுத்துப்போனவர். 14 ஆண்டுவனவாசம். பெண்ஜாதியைப் பறிகொடுத்துபிறகுமீட்பது என்றால்,லேசானகஷ்டமா? ஆகவே, மறுபடியும் ஒரு அவதாரம் எடுக்கச் சொன்னால், அவர் மறுத்து விடுவார் என்றேஎண்ணுகிறேன். சிவனாரைக் கேட்கலாமென்றாலோ, அவரும் “எத்தனையோ முறைதான் நான் வந்துபோனேனே! இன்னமும்தொல்லையா?” என்று கேட்பார். ஆகவே அவர்களைக் கேட்டுப் பயனில்லை.

* * *

அவர்களின் பிரதிநிதிகள், பிரதானிகள், ஆகியோர் இருக்கிறார்களே, அவர்கள் ஏதேனும் செய்யக் கூடாதா? ஏழைகள்படும்கஷ்டத்தை நீக்கமுன் வரக்கூடாதா? ஜீயர்கள் என்ன, மகந்துகள் என்ன, அவர்களிடம் உள்ள நஞ்சை புஞ்சைகள் என்ன, நகைநட்டு பெட்டி பணம் என்ன, தோட்டம் மடம் என்ன, இவைகள் ஏழைகள் துயர் தீர்க்க உதவக் கூடாதா! ஒவ்வொரு கோயிலிலும், செலவிடப்படும்பணம், இந்த விஷயத்துக்குச்செலவிடப்பட்டால், ஏழைகள் துயரம் எவ்வளவு குறையும்! ஏன், பிரதிநிதிகள் கூட சும்மா இருக்கிறார்கள்? மக்கள் ஏன் அவர்களைக் கேட்கக்கூடாது. பணமா இல்லை! பல்லக்கு பட்டாடை, ரதம், வாகனம், சொர்ணாபிஷேகம் முதலியவைகளுக்காக ஆகும் செலவுக்கு பணம் கிடைக்காமலா போகிறது. புதிய புதிய வேதபாடசாலைகள் வைக்க பணம் கிடைக்கிறதே. பசிப்பிணி போக்க இந்தப் பணத்தை ஏன் செலவிடக்கூடாது? மதமா கெட்டு விடும்?

* * *

பிச்சைக்காரர்களில், பாட்டாளிகளாக இருந்து பலன் காணாது வெளியே சுற்ற ஆரம்பித்த மக்கள் சிலர் இருக்கிறார்கள். பிச்சை எடுத்தலைத் தொழிலாகக் கொண்டு—பார்ப்பனரையல்ல நான் குறிப்பிடுவது, அவர்களுக்கு அது ‘பிறப்புரிமை’—சாதாரண பிச்சைக்காரர்களையே குறிப்பிடுகிறேன்—இவர்களின் தொல்லைபற்றி பேசாதவர்களே இல்லை. இதற்காகப் போடப்படும் திட்டங்களும் பலப்பல. சாவடி அமைக்கவேண்டும். அதிலே கூன் குருடு நொண்டி நோயாளியாக இருக்கும் பிச்சைக்காரர்களுக்கு சோறு போடவேண்டும். மற்ற பிச்சைக்காரர்களிடம் வேலை வாங்க வேண்டும். இதற்காக சென்னைக் கார்ப்பரேஷன் இத்தனை இலட்சத்திலே ஏழைகள் விடுதித் திட்டம் தீட்டவேண்டும் என்று யோசனைகள் பல கூறுகிறார்கள். கடைசியில் பணமுடை வருகிறது. திட்டம் திட்டமாகவே நிற்கிறது. இதற்காக கார்ப்பரேஷனைக் குறைகூற முடியாது. சட்டியில் இல்லை, ஆகவே அகப்பையில் ஒன்றும் வரவில்லை.

பணம் இருக்கிற இடத்திலே யோசனை கூறாமல், பணம் இல்லாத இடத்திலேபோய் யோசனைகளைக் கூறி என்ன பலன்! ஆண்டவனின் பிரதிநிதிகளிடம் இருக்கிறதுபணம். அவர்கள் நடத்தவேண்டும் இந்த திட்டங்களை. பொதுமக்கள் அவர்களை இம்மாதிரி நடத்துங்கள் என்று வற்புறுத்தவேண்டும்.

உதாரணமாக இப்படி நடந்தால் நன்றாக இருக்குமா இராதா என்று எண்ணிப்பாருங்கள் என்று ஆஸ்தீக அன்பர்களுக்குக் கூறுகிறேன். இதோ சீரங்கம் கோயில் இருக்கிறது, திருப்பதி இருக்கிறது, இங்கு தினசரியும், உற்சவ காலங்களிலே விசேஷமாகவும், “பிரசாத வகையறாக்கள்” சாமிக்குநைவேத்யம் செய்யப்படுகின்றன. சாமிக்கோ பசிப்பதில்லை. பசி எடுத்தால் அவர் எப்படி சாமியாக முடியும்? பிரசாதத்தை உண்டு களிப்பவர்கள் யார்? ஆசாமி

(5-ம் பக்கம் பார்க்க)

# காவடி தூக்கிகளுக்குக் கண்டனம்

"பயல்கள், எல்லாம் ஒன்று கூடிண்டு நேத்து சாயரட்சை, நம்ம சர். M. C. T. முத்தய்ய செட்டியார் ஸ்கூல் கிரவுண்டிலே, நெருப்புக்கக்குவது போலப்பேசினுடா, கிட்டு! நான், என்னமோ, நம்ம மந்திரி வர்ராரே, அவர் இந்தச் சூனுமானு அண்ணுதுரை, கம்யூனிஸ்டு ஜீவானந்தம், இவாளுக்கெல்லாம், ஏதாவது 'டோஸ்' தருவார், என்று எண்ணிண்டு, போய்ச் சேர்ந்தேன். கடைசியிலே, அசல் சூனுமானு கூட்டமே, தேவலேன்னு தோணிப் போச்சு போடா"—

"மண்டு! நீ, எப்போதும் இப்படித்தான் தவறு செய்திண்டிருக்கே. அந்தப்பயல்களெல்லாம், வேறுவேறு கட்சின்னு சொல்லிண்டாலும், உள்ளூர, நம்மளவாளைப் பொறுத்தமட்டிலே, நமக்கு ஆதிக்கம் இருக்கப்படாது என்கிறவிஷயத்திலே, ஒரே விதமான அபிப்பிராயம் கொண்டவாளாச்சே! அது தெரியாமல் போனே, அந்தக் கூட்டத்துக்கு. போகலாமோ? நான், புரசைவாக்கம் பக்கமே அன்று போகப்படாது, என்று, சாரைசாரையாக, அந்தக் கூட்டத்துக்குப் போய்ட்டு வருவா—அதை எப்படிக் காண்பது—என்கிறதாலே, நான் திருவல்லிக்கேணி போனேன்; அங்கே, நம்மதிருமலே சிஸ்டர்திலகா, 'டான்சு'—அதை ஜோராப் பார்த்துட்டு வந்தேன்."

"நான், கூட்டத்திலே சிக்கிண்டு, அவா, கொடுத்த 'டோஸ்களை' எல்லாம், வாங்கிண்டு..........."

"முகத்திலே அசடு வழிஞ்சிண்டு கிடந்திருப்பே......."

"போடா! வெளிக்குக்காட்டிக் கொள்ளலாமா? நானும் ஹியர் ஹியர்' போட்டுண்டு இருந்து விட்டேன்."

இது, இரு பிருமணமாணவர்களின் உரையாடல்.

* * *

"நாம்கூட மறந்து விட்டோம்; காங்கிரஸ் மந்திரி காளா வெங்கடராவ் கவனப்படுத்தினர், பார்த்தீரா?"

"எதை?"

"என்ன இது! கவனிக்கவில்லையோ! இனும் விவசாயி மாநாட்டைத் துவக்கிவைத்தாரே, அப்போது, பிற்போக்காளர் என்று கருதப்பட்டுவந்த பொப்பிலி மந்திரி சபை, இனும் குடிகளுக்கு உரிமை வாங்கித்தரும் சட்டத்தை நிறைவேற்றியிருக்கும் போது, மிகமுற்போக்கானகட்சி என்று கூறிக்கொள்ளும் காங்கிரஸ் கட்சியினராகிய நாம், இனும் குடிகளுக்கு உரிமை தரும் சட்டம் இயற்றுவதற்குத் தயக்கம் கொள்வது நியாயமா? என்று கேட்டாரே, காளா!"

"ஆமாமாம்! மறந்து விட்டேன்! இப்போது நன்றாகக்கவனமிருக்கிறது. கேட்டார், காரசாரமாக."

"சில காங்கிரஸ் காரரின் முகம், மந்திரி அவ்விதம் பேசினபோது செத்துப் போய் விட்டது போங்களேன்!"

"அதிலேயும், மந்திரியின் ஆங்கிலப்பேச்சை சரியாக மட்டும தமிழாக்கி இருந்தா, 'ரசம்' நன்றாக யாவருக்கும், புரிந்திருக்கும். அவர் என்னமோ ஆங்கிலத்திலேபேசினர்"

**தமிழ் நாடு இனும் விவசாயி மாநாடு.**

"அவர் ஆந்திரர்—தமிழ் தெரியாது. அதற்கென்ன செய்யலாம். தமிழ் தெரிந்த டாக்டர் கிருஷ்ணசாமியே, தம்முடைய அழகிய ஆங்கிலத்தைக் கேட்டு அனைவரும் சொக்கிவிட வேண்டும் என்று கண்டிப்பாக ஆங்கிலத்திலேதான் பேசுவேன் என்று பிடிவாதம் செய்யவில்லையா! அதைப் பொறுத்துக் கொண்டபோது, காளா பேசினதை ஏன் பொறுத்துக் கொள்ளக் கூடாது"

"அதுசரி! மேலும், ஒருகாங்கிரஸ் மந்திரியின் வாயாலே பழய ஜஸ்டிஸ் மந்திரிக்குப்பாராட்டுதல், பகிரங்கமாகக் கிடைக்கும் போது அது எந்தப்பாஷைபாக இருந்தால் என்ன!"

இரு, பார்ப்பனரல்லாத முதியோர்களின் பேச்சு, இது.

* * *

ஆலயம் திறந்தது! அறிவு திறக்கவில்லையே. ஜடாமுடி மைனர்களை ஒழியுங்கள்! சேஞ்சதிருதம் பேசும் சோரூபங்கள். கன்னியர்க் கன்றி பிறர்க்குக் காட்சிதரா, மடத்தலைவர்கள். தங்கத்திலே செங்கோல்—வெள்ளி குத்துவிளக்கு—ஏன்!

இவை, வாலிபர்கள், ஒருவருக்கொருவர், வீசிக்கொண்ட நகைச் சுவை வாசகங்கள்.

* * *

இவ்வளவுக்கும் காரணம், 27-ந் தேதி மாலை, புரசை, M. C. T. முத்தைய்ய செட்டியார் பள்ளிக்கூட மைதானத்திலே நடைபெற்ற தமிழ் நாடு இனும் விவசாயிகள் மாநாடு.

மைதானத்திலே, எங்கு நோக்கினும் வீறுகொண்ட வாலிபர்கள்—திராவிடர் கழகம்—கம்யூனிஸ்டு—தமிழரசுக் கழகம் — காங்கிரஸ்—முதலிய பல கழகங்களைச் சார்ந்தவர்களும் கூடி இருந்தனர்.

தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்து, விவசாயக் கழகத்துத் தோழர்கள் வந்திருந்தனர்.

இனும்தாரர்களையும், ஜெமீன்தாரர்களைப் போலவே ஒழித்தாக வேண்டும் என்ற உறுதிகொண்டு, காங்கிரஸ் சட்டசபைக் கட்சிக் கூட்டத்திலே போராடி, வைத்யநாத ஐயர், வரதாச்சாரியார், பாஷ்யம் ஐயங்கார், ஆகியோரின் எதிர்ப்பைப் பெற்ற, தோழர்கள் கோசல்ராம், கன்னியப்பன், போன்ற M. L. A.க்கள்; தஞ்சையிலே காங்கிரஸ் என்ற முகாம் இருந்தபோது தன்னுடன் இருந்த தலைவர்களெல்லாம், இன்று முதலாளி முறையைக் காப்பாற்றுவதற்காகத் தனிமுகாம் அமைத்துக் கொண்டது கண்டு சீறிப் போரிடும் கோவிந்தசாமி செட்டியார் போன்ற காங்கிரஸ் தலைவர்கள், தோழர்கள் T. சண்முகம், தேவராசன், குருசாமி, குஞ்சிதம், ஜெனார்த்தனம், அன்பழகன், நெடுஞ்செழியன், ஆகிய, திராவிடத் தளபதிகள்,—இங்ஙனம், தீவிரநோக்கமுடையோர் அனைவரும், ஒருசேரக் காட்சி தந்தனர், அந்த மைதானத்தில். மகாநாட்டின் வரவேற்புரை

யாற்றிய பாலகிருஷ்ணன் என்பவர், சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டிக்குத் துணைத் தலைவர். அவர், இனாம்தாரர்களைக் காப்பாற்றக் கிளம்பிய, சாஸ்திரி, ஐயர், ஐயங்கார்களை, 'பிய்த்து' எறிந்துவிடும் விதமாகப் பேசினார்—ஏன்?—அவ்வளவு கோபம் பிறக்கும்படி அவர்கள் நடந்து கொண்டுவிட்டனர்.

சட்ட புத்தகங்களைத் தூக்கிக் கொண்டு சண்டைபோட வருகிறார்கள்—இவர்களின் கொட்டம் முறியடிக்கப்படவேண்டும், என்று முழக்கமிட்டார்.

கோயில்களிலே, ஏன் ஒரு ஜாதியாரே, பூசாரி வேலை செய்யவேண்டும்? சர்க்காரே வேண்டுமானால் இந்தக் கோயில்கள், மடங்கள் ஆகியவற்றை எடுத்து நிர்வாகம் செய்யட்டும்; பூசாரி வேலைக்கு ஒரு தனி பள்ளிக்கூடம் வைத்து, அதிலே படித்து யார் தேறுகிறார்களோ, அவர்களை வேலைக்கு வைக்கட்டும், ஜாதியைப் பற்றிக் கவனிக்காமல்."—என்று தோழர் பாலகிருஷ்ணன் கூறியபோது, கூட்டத்திலே ஒரே ஆனந்தமயம். "தமிழைக் காப்பாற்ற மடாதிபதிகள்' முன்வந்துள்ளனர் என்று அமைச்சர் அவினாசியார், கூறுகிறார், புளகாங்கிதமடைகிறார். எவ்வளவு காதல், மடத் தலைவர்களுக்கு, இந்த கன்னித் தமிழிடம்! தங்கள் ஆதிக்கம் முழுவதுக்கும் ஊறு வந்துவிட்டது என்பதைக் கண்டுகொண்ட அவர்கள், ஏதோ ஓர் சிறு பாகத்தைத் தந்து, மற்றதைக் காப்பாற்றிக் கொள்ளலாம் என்று சூது செய்கிறார்கள். இது யாருக்குத் தெரியாது! இவர்களால் இடர்பட்டது போதும்! ஜெமீன்தாரர்களுக்கும் இனாம்தாரர்களுக்கும் இனி இடம் கிடையாது. இதைத் திட்டமாக நாடு தெரிவிக்கிறது. இந்த அணி வகுப்புக்கு இதுவே பொருள். நாங்கள் ஒவ்வொருவரும், தனித் தனிக் கட்சியினர். ஆனால் இந்த தகாத முறையினை ஒழிப்பதற்கு, நாங்கள் ஒன்று கூடி நிற்கிறோம்." என்று தலைமை தாங்கிய ம. போ. சிவஞானம் கூறினார்.

காங்கிரஸ் மேலிடம் சென்று கட்டளை பெற்றுவந்த காதையை ம. பொ. சி. கண்டிக்கும்போது, "இங்கே எதிர்ப்பு கிளம்பியதும், வடக்கு நோக்கினர்—மடத் தலைவரின் ஆட்களும், ஜெமீன்தாரர்களும்—காவடி எடுத்தனர் - ரயிலில் பிரயாணம் செய்தனர்.

காங்கிரஸ் மந்திரிகள், விமானம் ஏறி, அதே இடம் சென்றனர். அது ரயில் காவடி! இது விமானக்காவடி இவ்வளவுதான் வித்யாசம்!!"—என்றார். காங்கிரஸ்காரர் உட்பட அனைவரும் கைகொட்டி நகைத்தனர்.

"நஷ்டஈடு, யாருக்கு? ஜெமீன்தாரர் இனாம்தாரருக்கா! ஏன் தரவேண்டும்? அவர்களின் உயிருக்கும், மிச்ச உடைமைக்கும் உத்திரவாதமளிக்கும் நமக்கல்லவா அவர்கள் நஷ்டஈடு தரவேண்டும்?" என்று கேட்டு, நஷ்டஈட்டை அதிகப்படுத்தவேண்டும் என்று, காங்கிரஸ் மேலிடம் கூறுவதைக் கண்டிப்பாக, நிராகரிக்கவேண்டும், என்று கேட்டுக்கொண்டார்.

மதத்தின் பெயரால் நடக்கும் சகல அட்டூழியங்களையும், ஆத்திகத்தின் பெயர் கூறிக்கொண்டு அறிவை அழிக்கும் ஆணவக்காரரின் போக்கையும், ஜெமீன்முறையிலும் இனாம்முறையிலும், சிக்கிய நாடு சீரழிந்திருப்பதையும், மிக விளக்கமாக, தோழர் ஜீவானந்தம் பேசினார்.

நட்டகல்லைத்தெய்வமென்று நாலு புஷ்பம் சூட்டியே சுற்றிவந்து முணுமுணுத்து சொல்லும் மந்திரம் ஏதடா! என்று அந்த நாட்களிலே, அறிஞர்கள் கேட்டனர், மண்டையில் மண்கொண்டு, மதத்தை நம்பிக் கிடந்தவர்களை. இன்றுமா, அவர்களின் ஆதிக்கம் இருக்கவேண்டுமென்று நாடு கூறும்! அல்லாடியும் வெங்கடராம சாஸ்திரியும் சட்டங்களைக்காட்டி மிரட்டினால், என்ன பயம்! நாம், அவர்களின் போக்கை நன்கு அறிவோம். அவர்கள், பழைமைக்குப் பிரதிநிதிகள்! ஏழையின் பெயரைக் கூறிக்கொண்டு காந்தியின் பெயரைக்கூறிக்கொண்டு சட்டசபை சென்றவர்களிலே, 76 பேர், இனாம்தாரர்களின் பக்கம் பேசி, ஓட் அளித்தார்களே, அவர்களின் காதகத்தை, பிற்போக்கை, எப்படிச் சகிப்பது. பொதுமக்களே! அவர்கள் காது செவிடுபட ஆர்ப்பரியுங்கள், ஜெமீன்ஒழிக! இனாம்ஒழிக! நஷ்டஈடு தராதே! என்று முழக்கமிடுங்கள். ஏழைக்கு விரோதியாய், தேர்தல் வாக்குறுதிக்கு விரோதியாய், ஜெமீன் இனாம் பக்கம் நின்று, காட்டிக்கொடுத்தால், நீங்கள் சட்டசபை மெம்பர்களாக வாழமுடியாது மனிதர்களாக உலவவும் அனுமதிக்க மாட்டோம், தூ! தூ! தூ! என்று காரித்துப்புவோம் என்று பொது மக்கள் கூறிவிடவேண்டும். இந்த மாபெரும் கூட்டத்தின்மூலம், பல கட்சியினரும் ஒன்றுகூடிய கூட்டத்தின்மூலம் இதைத்தெரிவிக்கிறோம். நஷ்டஈடு கொடுக்காதே! இனாம்களை விலக்காதே! ஏழையைக் கெடுக்காதே!" என்று, வீரஉரையாற்றினார் ஜீவானந்தம்.

"திராவிடர் கழகம், முற்போக்கான திட்டத்தை யார் கொண்டு வந்தாலும், ஆதரிக்கும். அந்தத்திட்டம், திராவிடரிலே சிலரையே பாதிக்குமானால்கூட. கழகத்தின் நோக்கம், பாடுபடுபவன் வாழவேண்டும் என்பது. எனவே இந்த இனாம், ஜெமீன் ஒழிப்பு திட்டத்தை எங்கள் கழகம், மனப்பூர்வமாகஆதரிக்கிறது என்பதை எடுத்துக்காட்டவே நான் இந்தக்கூட்டத்திலே கலந்துகொண்டேன். இந்த மசோதாவுக்குப் பிறகும், நில முதலாளித்துவ முறை இருக்கும். ஆனால் இது ஆரம்ப முயற்சி. இதற்கே, எதிர்ப்பு கிளம்பிவிட்டது.

ஹைதராபாத் நிஜாமை, ராஜ்யத்தை விட்டுப் போ, என்று கூறினால், யாரும் எதிர்ப்பதில்லை. கோலாப்பூர், காஷ்மீர், போபால் பரோடா, எந்தசமஸ்தானத்தையும், நீ, ஆளுவானேன், கொடுமக்களிடம் என்று மன்னர்களைக் கேட்டால், எதிர்ப்பு, பொதுமக்களிடம் கிளம்புவதில்லை—கிளம்பாது — ஆதரவே பெருகும்—ஏன்—பிரிட்டிஷ் மன்னருடைய மணி முடியைப் பறித்து, அதிலே உள்ள நவரத்னக் கற்களைப் பெயர்த்து, சட்டசபை மண்டபத்து வெளி வாயற்படியிலே, அலங்காரத்துக்காக, புதைத்திட வேண்டும், என்று கூறுங்கள், எதிர்ப்பு இராது, ஆனால், இனாம்களிலே கை வைக்கிறோம் என்ற உடனே, நாடு அதிரும் எதிர்ப்பு உண்டாகிறது! ஏன், என்று சிலர் ஆச்சரியப்படலாம். நான், எதிர்ப்பு இருப்பது கண்டு ஆச்சரியப்படவில்லை—இவ்வளவு குறைவாக இருக்கிறதே எதிர்ப்பு என்றே ஆச்சரியப்படுகிறேன். ஒரு பத்தாண்டுகளுககு முன்பு, மடம், கோயில், இவைகளிடம் உள்ள இனாம்களைப் பற்றி இன்று பேசியதைப் போல, ஜடா முடி மைனர்கள்—கன்னியருக்கே காட்சி தருபவர்—காதகர்—பாதகர் — இவைகளைப் பேசியிருந்

(16-ம் பக்கம் பார்க்க)

# கிளர்ச்சி

—⊛—

கிளர்ச்சி ஏதோ செய்வதற்காகவே இப்படி இவர்கள், மாநாடுகள் கூட்டுவதும், கூட்டங்கள் நடத்துவதும், படை திரட்டுவதும், பவனிகள் நடத்துவதுமாக உள்ளனர். இவர்களோ, நாட்டைப் பிரிக்கவேண்டும், நாடாள்வோராக ஆரியரோ அவர் தம் ஆதரவாளர்களோ வரவிடலாகாது என்று கூறுபவர். எனவே, இவர்கள் கிளர்ச்சி துவக்கினால், இந்த நோக்கங்களின் பொருட்டே இருக்கும், என்று எண்ணிக், காங்கிரஸ் சர்க்காரும், காங்கிரஸ் கட்சியினரும், திராவிடர் கழகத்தைச் சந்தேகப் பார்வையுடனும், விரோத மனப் பான்மையுடனும், கவனிக்கலாயினர்.

அது போலவே, திராவிடர் கழகத்தினரில் பலரும், கிளர்ச்சி உடனடியாக ஆரம்பமாக இருக்கிறது என்று எண்ணி, ஆர்வத்தையே அவசர வாதமாக்கினர்.

கிளர்ச்சி, கல்வீசிக்கனியை விழச் செய்யும் காரியம் போன்றதல்ல— அவசரமோ, ஆர்வத்தின் கொந்தளிப்பை மட்டுமேநம்புவதோ ஆகாது என்பதைத் திராவிடக்கழகத்தினரில் சில பலர் உணராமல், எப்போது கிளர்ச்சி, ஏன் இன்னும் துவக்கவில்லை, என்று கேட்டபடி இருந்தது கண்டு, பொதுமக்களும், ஏதோ நடக்க இருக்கிறது என்று எண்ணிக் கொண்டனர்.

அடிக்கடி நடைபெறும் கூட்டங்களும், அடுத்தடுத்து நடத்தப்படும் மாநாடுகளும், இந்த எண்ணத்தை அதிகப்படுத்தி விட்டன.

ஆர்வம் கொந்தளிக்கவே, கிளர்ச்சிக்கேற்ற காரியம் எது, என்பது பற்றி யோசிப்பதைக் கூட மறந்து, உணர்ச்சியுள்ள நண்பர்கள், எப்போது கிளர்ச்சி? — என்று கேட்கலாயினர்.

இவைகள் எல்லாம், தவறான குறிகள் என்று அறிந்த தலைவர், கிளர்ச்சியைப் பற்றிய தமது கருத்தைத் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்.

பெரியாரின் கருத்துரையைச் சென்ற கிழமை குடிஅரசுத் தலையங்கம், விளக்கமாக்கிக் காட்டியிருக்கிறது-அதன் மறு பதிப்பு விடுதலையிலும் வெளிவந்தது.

"கழகம், இப்போது கிளர்ச்சி எதும் செய்யப்போவதில்லை.

பிரச்சாரம் புரியும் இயக்கமாகத் தான் இன்னும் சில காலம் இருக்கப் போகிறது.

பிரச்சாரம், பலன் தராமலோ, புத்துணர்ச்சி யூட்டாமலோ இல்லை.

நாடாள்வோரே கூட, இந்தப் பிரசாரம் உண்டாக்கும் சூழ்நிலைக்கு ஏற்பத் தமது காரியங்களை நடத்திச் செல்கின்றனர்."

இவை, தலைவரின் கருத்து. தெளிவுபடவும் திட்டமாகவும் இக்கருத்து வெளியிடப்பட்டது கண்டு, நாம் மகிழ்கிறோம். ஏனெனில் குழப்ப நிலை, இதனால் தெளிவு படுகிறது. தோழர்கள், கிளர்ச்சிபற்றி அடிக்கடி, நமக்கும் எழுதிக்கொண்டுள்ளனர். அவர்களுக்குத், தலைவர் பெரியாரின் கருத்தையே பதிலாக அளிக்கிறோம்.

★

# நல்ல முயற்சி

1. சட்டசபைக் கூட்டங்களுக்குச் சென்றிருந்து, நடவடிக்கைகளைக் கவனிப்பது.

2. சட்டசபையிலே, கொண்டு வரப்படும் மசோதாக்களைக் கவனித்து, மக்களின் பார்வைக்கு வைப்பதுடன், அவர்களின் கருத்துகளைத் திரட்டுவது; அதைச் சட்டசபை அங்கத்தினர்களுக்கு அனுப்புவது.

3. அரசியல் திட்டம், பொருளாதார பிரச்னைகள் சம்பந்தமான விஷயங்கள் சட்டசபையிலே கவனிக்கப்படும்போது, அந்தத் துறைகளிலே வல்லுநர்களை அழைத்து அந்தத் திட்டங்களைப் பற்றிய தெளிவுரைகளை வழங்குமாறு கேட்பது.

4. சட்டசபை கவனித்திருக்க வேண்டிய, ஆனால் எக்காரணம் பற்றியோ கவனியாதிருக்கும், பிரச்னைகளைச், சட்டசபையினரின் கவனத்திற்குக் கொண்டுவருவது.

இவையும் இவைபோன்றவுமான நோக்கங்களுடன், சென்னையில், சட்டசபை நடவடிக்கைக் கவனிப்புக் கமிட்டி என்றோர் அமைப்பு ஏற்படுத்த, நண்பர்கள் முயற்சி எடுத்துக் கொள்வதாகவும், 'Spark' பத்திரிகை ஆசிரியர் தோழர் வேதரத்னம், தோழர் T. செங்கல்வராயன், நியூஜஸ்டிஸ் ஆசிரியர் வேணுகோபால், பொருளாதார ஆசிரியர் முத்தையா M. A., தோழர்கள் ஜீவானந்தம், சிவஞானம், ஆகியவர்களை மேற்படி கமிட்டியை நடத்தும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்வதென்றும், நண்பர்கள், நமக்குத் தெரிவித்திருப்பதுடன், நமது கருத்தையும் கேட்டுள்ளனர்.

இந்த முயற்சி அவசியமானது, பாராட்டுதலுக் குரியது, என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்வதோடு, சட்டசபை நடவடிக்கைகள் பற்றிக், கவலை செலுத்தவேண்டியது, ஜனநாயக காலத்திலே, பொது மக்களுக்குள்ள மிக முக்கியமான பொறுப்பு ஆகையால், இந்தக் காரியம் திறம்பட நடத்தப்பட வேண்டுமென்பதை வலியுறுத்துகிறோம். சட்டசபை நடவடிக்கைக் கமிட்டி, தொடர்ச்சியாகக் குறித்துக்கொண்டுள்ள குறிக்கோளின்படி நடந்து கொள்வதுடன், அவ்வப்போது, பல கட்சித் தலைவர்களையும், கருத்துரை வழங்குமாறு கேட்டுப் பெற்றுப் பயனடைய வேண்டும். நிரந்தர விழிப்பே, ஜனநாயகத்துக்கு விலை என்று கூறிய அரசியல் அறிஞரின் கருத்தை மனதிலே கொண்டு துவக்கப்படும் இந்த முயற்சிக்கு நமது ஆதரவு தருவதில் மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கிறோம்.

—

# முடியாதே!

—

அரை மணி நேரத்திற்கதிகமாகவே, மதுரை வைத்யநாத ஐயர், பேசினார், சட்ட சபையில். சட்டசபைத் தலைவர், இதை அவருக்குக் கவனப்படுத்தினார். உடனே மதுரை ஐயர், "சட்டசபைத்தலைவரே! இந்த மசோதாவினால் விளையக்கூடிய அநீதிகளை விளக்குவதென்று ஆரம்பித்தால், நான் வருஷக் கணக்கிலே பேசுவேன்!"—என்றார்.

அவரால் முடியும் பேசிக்கொண்டிருக்க. ஆனால் கேட்டுக் கொண்டிருக்க வேண்டுமே!! அது, யாரால் முடிகிற காரியம்! எவ்வளவு சகிப்புத் தன்மை இருக்கவேண்டும்.

★

திராவிட நாடு

காஞ்சி] 2—11—47 [ஞாயிறு

# சட்டசபையில் கடவுள்

"கடவுளிடம், இந்தச் சர்க்காருக்கு மதிப்பு இல்லையா? ஆண்டவனுக்கு அளித்ததை, மீண்டும் எடுத்துக் கோள்வது அடுக்குமா?"

என்று பக்தர் வைத்யநாதஐயர், சென்னைச்சட்டசபையில் கேட்டார். ஜெமீன் இனும் ஆகியவைகளை ஒழிக்கும் திட்டத்தை, ஆத்திக அழிவுத் திட்டமென்று எண்ணிக்கொண்டு ஐயர் அலறுகிறார். காளாவின் திட்டம் அப்படிப்பட்டதல்ல!

நாட்டிலே, ரயத்வாரி முறையின் கீழ்உள்ள நிலங்களைவிட எந்தவகையிலும் உயர்ந்ததல்லாததாக இருப்பினும், ஜெமீன், இனும் நிலங்களில், விவசாயி அதிகத்தீர்வை செலுத்தும் கொடுமையும், விவசாயிக்கும் சர்க்காருக்கும் இடையே, 'ஜரிகைக் குல்லாயும் ஜெபமாலையும்' தரகு வேலைபார்த்துக் கிடைப்பதில்பெரும் பகுதியை விழுங்கும் கொடுமையும் ஒழியவேண்டுமென்பதே, காளாவின் நோக்கம். அவருக்கு மட்டும் தனியாக ஏற்பட்ட நோக்கமுமல்ல, காங்கிரஸ்கட்சிக்கே அது நோக்கம், தேர்தல் திட்டம், பொதுமேடை முழக்கம்.

சென்ற கிழமை, ஆசியநாடுகளின் தொழிலாளர் மாநாட்டிலே பேசும் போது, பண்டித ஜவஹரும், ஜெமீன்தாரி முறை ஒழிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். பல மாநாடுகளிலே காரசாரமாக இந்தமுறை கண்டிக்கப்பட்டுத், தீர்மானங்கள் நிறைவேறின. இவ்வளவு இருந்தும், ஜெமீனுடன் இனமும் ஒழியும் என்ற உடனே, வைத்யநாதருக்கு ஆவேசமே பிறந்துவிடுகிறது; ஆண்டவனை அழைக்கிறார், சர்க்காருக்கு நாத்திக நோய்பிடித்து விட்டது என்று அலறுகிறார் — கோபம் காரணமாக, சிறுபிள்ளைத்தனமாகப் பேசுகிறோம் என்பதையும் மறந்து,பூர்வீகமன்னர்கள் கொடுத்த இனாம்களை, கடவுளுக்கென்று கொடுத்த இனாம்களை, நீங்கள் யாரய்யா, திருப்பித்தரச் சொல்ல, என்று கேட்கிறார், ஏதோ,இவருக்கு, இந்தக் காரியத்தைக் கவனிக்கக் கடவுள் வக்காலத்ததிகாரம் கொடுத்திருப்பது போல. கடவுள் சொத்தாம்! இருக்கட்டுமே! அதைஎடுத்து, காளா, சைத்தானுக்குக் கொடுத்து விடவில்லையே!! கடவுளின் பிள்ளைகளிலே பாடுபடுகிறவர்களுக்குப் பசியார உணவளிக்கும் வகையிலே, முறையை மாற்றி அமைக்கிறார். இது ஆத்திகத்தின் அழிவு என்று அலறுகிறார் மதுரை ராஜிநாமா!

"ஆத்திகன் என்று போற்றுகிறார்கள். சிலர் என்னை நாத்திகனென்று தூற்றுகிறார்கள். கடவுளின் கட்டளையைக் கவனிக்க வேண்டுமென்று கவனப்படுத்துகிறார்கள். நண்பர்கள் இவ்வளவு கவலைப்பட வேண்டியதே இல்லை கடவுள் விஷயமாக. மக்கள் கட்டளை தான் மகேசன் கட்டளை! இனும்களின் மூலம் கிடைக்கும் வருமானத்தை, இரண்டோர் 'தருமகர்த்தாக்கள்' விழுங்கிவிடுவதைவிட, இலட்சக்கணக்கான மக்கள், பகிர்ந்து, அனுபவிப்பது கண்டு, கடவுள் கட்டாயம் களிப்பார். பூர்வீகக் கலாச்சாரத்தையும் ஆலயங்களையும் நான் அழித்துவிடுகிறேன் என்று அங்கத்தினர் சிலர் கூறினர். அவர்களுக்கு நான் நினைவூட்டுகிறேன், உலகிலே, நாம் புதிய வாழ்க்கை முறையை அமைத்துக் கொண்டிருக்கிறோம். நாளை நடப்பதையாரறிவார்—இதே முறையான சர்க்கார் இருக்குமோ, வேறுமுறை வருமோ, யார் கூறமுடியும்? இன்று சர்க்கார் நடத்தும் ஆட்கள் மாறக் கூடும், வேறு ஆட்கள் சர்க்காரை நடத்தவரக்கூடும். அவர்கள், தானம், இனும், இவைகளை எல்லாம் ரத்து செய்து விடவும் கூடும்." என்று காளா வெங்கடராவ், பேசினார். சட்டசபையிலே பலர் 'கரகோஷம்' செய்தனர். சட்டசபைத் தலைவர், அங்ஙனம் செய்யலாகாது என்கிறார். ஆம்! வயிறு எரிந்துகிடக்கும் வரதாச்சாரி, வைத்யநாதர்களை நோக்கிக் காலவேகம் கைகொட்டிச்சிரிக்கிறது! கடவுளின் பெயர்கூறி, நாத்திகன் என்று பழிசுமத்தி, எப்பாடுபட்டேனும், ஜெமீன் இனும் ஒழிப்பைத் தடுத்து விடவேண்டும் என்று அவர்கள் முயற்சி செய்கின்றனர். காளா தோற்றால், காரியம் தோற்றுவிட்டதாகாது—அவர் கொண்டு வரும் மசோதாவைவிட, எளிய முறையில், சட்ட நிபுணர்களுக்கு ஒரு வேலையும் தொல்லையும் தராத முறையிலே, திட்டம் வரும். அதைத்தான் காளா, கவனப்படுத்தினார். கடவுள் பெயரைச் சட்டசபையிலே இழுத்துவைத்துப் பேசுவதன் மூலம், காலவேகத்தைத் தடுத்துவிட முடியும் என்று அவர்கள் எண்ணுவது கண்டு, நாடு கைகொட்டிச் சிரிக்கிறது!

★

## விலாசம் கேட்பாரே!

இனும்தாரர்களிடம் உள்ள நிலத்தின் (இப்போதைய மார்க்கட் விலைவாசிப்படி) மதிப்பு, எவ்வளவு தெரியுமோ! சுமார் 150 கோடி ரூபாய்!! அவ்வளவும், 'பிராமணமமதேவதா'வுக்கு, அர்ப்பணிக்கப்பட்டவை. அவ்வளவையும், ஒரு சட்டத்தின் மூலம், இழக்க எப்படி மனம் வரும்! அதனால்தான் பதறுகிறார்கள்! ஆனால், இவ்வளவு ஏராளமான 'சொத்து', குனியாமல் நிமிராமல், குத்தாமல், புடைக்காமல்,வெட்டாமல், விதைக்காமல், தலைமுறை தலைமுறையாக ஒருபாடுபடாத கூட்டம் உண்டு கொழுத்து வந்ததைப், பாடுபடுபவர்கள் எண்ணினால்,அதைவிட அதிகமாக அவர்கள் மனம்பதறுமல்லவா!

விலாசமல்லவாகேட்பார்கள்,இந்த வீணர்களைக் கண்டு, கேட்க! விலாப் புடைக்க இத்தனை காலமாகத் தின்றது போதாதா, இன்னமுமா பேராசை — நீங்கள் மனிதர்களா, அல்லது, மற்றவன் உழைப்பைத் தின்று வாழும் மாமிசப்பிண்டங்களா!—என்றெல்லாம் கேட்பார்கள். தொகை பாருங்கள், 150 கோடி அல்லவா!

---

## ஏஜண்டுத் தோழர்களுக்கு

அக்டோபர் மாதம் முடியவுள்ள பாக்கி "பில்" ஏஜண்டுத் தோழர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. **9-11-47**க்குள் பாக்கி முழுவதும் அனுப்பப்பட வேண்டும். பாக்கி அனுப்பத்தவறும் ஏஜண்டுகளுக்கு **9-11-47** முதல் பத்திரிகை கண்டிப்பாகஅனுப்பப்படமாட்டாதென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**மானேஜர்.**

# நம் நாட்டுக் கொலு!




நவராத்திரி பண்டிகையின் போது, பொம்மைக்கொலு வைக்கிறார்களல்லவா, ராஜா ராணி, ராமன் கிருஷ்ணன், மாடு குதிரை, முதலிய பலரகங்கள். இந்த விளையாட்டுக்கொலு கிடக்கட்டும். இன்று, நாட்டிலே உள்ள உண்மை நிலையைக் கோலுவாக்கிப் பார்த்தால், எப்படி இருக்கும் என்பதை எண்ணிப்பாருங்கள். சித்திரம் அதுதான்.

# முத்துமாலை

[தமிழ்த் தொண்டன்]

"உலகத்தில் எந்தப்பகுதியிலும்எந்தச் சர்க்காருக்கும் ஏற்பட்டிராத ஒரு பெரும் நெருக்கடியானசமயத்திலும் பண்டிதநேரு நிதானம் தவறாதது மட்டுமன்றி உயர்ந்த நோக்கத்துடன் நடந்துகொள்கிறார்."

பம்பாய் இந்தியவர்த்தக சபையில் ஆர். கே. ஷண்முகம் செட்டியார்.

அதில் சந்தேகம் கூடவா? ஆர். கே. ஷண்முகம் செட்டியாரை நிதிமந்திரி பதவியிலமர்த்திய பிறகும், பண்டிதரின் உயர்ந்த நோக்கத்தைப்பற்றிச் செட்டியாருக்குச் சந்தேகமிருக்க நியாயமில்லையே!

* *

"நேருஜி இருக்க நமக்கென்ன பயம்?"

ஷை யார்

சமீபத்தில் சென்னை வந்துள்ள அகதிகளை விசாரித்துப் பார்த்தால் தெரியும்.

* * *

"தென்னாப்பிரிக்காவை மட்டந்தட்டுக."

பத்திரிகைத் தலைப்பு

முடியாது சுவாமி. அது மலைகளும், காடுகளும் அடர்ந்த பிரதேசம்.

* * *

"இந்தியா இந்துக்களின் ராஜ்யமாகும்படி விடமாட்டேன்."

புதுடில்லியில்நேருஜியின்வீரமுழக்கம்.

"கிழக்குப் பாஞ்சாலத்திலிருந்து சகல முஸ்லிம்களையும்வெளியேற்றவேண்டும்."

அமிர்தசரசில் சர்தாரின் கர்ஜனை.

இப்படி முரண்பட்ட கருத்துக்களைக் கொண்ட இரு தலைவர்கள் ஒரேகாலத்தில் ஒரே சர்க்காரில் பொறுப்புள்ளபதவிகளை வகிப்பது இந்தத்துர்ப்பாக்கிய நாட்டைத்தவிர வேறு எந்த நாட்டிலும் காண முடியாத ஒருபெரும் அதிசயமல்லவா?

* * *

"இந்தியாவிடம் அதிகாரத்தை ஒப்படைத்ததேன்?"

—பிரைட்டன் சன்சர் வேடிவ் மகாநாட்டில் ஒரு கன்சர் வேடிவ்.

இந்திய ஜனசங்கியையைக் குறைத்து உணவுஉடை நெருக்கடியைச் சமாளிக்கும் யுக்தியாக இருக்கலாம்.

"இந்தியாவின் புதிய அந்தஸ்துக்குக் காரணமானவர்களில் முக்கியமானவர் காந்திஜி!"

—காந்தி ஜயந்திக்காக லண்டனில் இந்திய சர்க்கார் நடத்திய விருந்தில் பிரிட்டிஷ் மந்திரி ஹெண்டர்சன் பேச்சு.

புதிய அந்தஸ்து என்று இவர் எதைக் குறிப்பிடுகிறார்? வங்கம்,பீகார், பஞ்சாப் முதலிய இடங்களில் ஏற்பட்டிருக்கும் புதிய அந்தஸ்தையா?

* * *

"காங்கிரஸ் சர்க்கார் இல்லாவிட்டால் இந்த எட்டு அவுன்ஸ் அரிசிகூடக்கிடைக்காது."

—சென்னைகாந்திஜயந்திக்கொண்டாட்டத்தில் காமராஜர்.

காங்கிரஸ் சர்க்கார் ஏற்படுவதற்குமுன் களிமண்ணைத்தின்று வாழ்ந்த மக்களுக்கு இதன் உண்மை தெரியாதா?

* * *

"மகாத்மா சொல்கிறபடி நாம்நடக்கத்தான் வேண்டும்."

ஷை யார்.

பழனி முருகனைத் தெரிசிக்கத் தமிழ் நாட்டுக்கு வந்த காந்தியார் காமராஜர்கூட்டத்தை "சதிகாரக்கும்பல்" என்று புகழ்ந்துவிட்டுப்போனதன்பின்தான் காமராஜருக்கு இந்த ஞானோதயம் ஏற்பட்டிருக்கிறதுபோலும்!

* * * *

"இந்தியா நிச்சயம் வல்லரசாகும். நாட்டில் தற்சமயம் நடப்பது புதுயுகத்தின் பிரசவவேதனையே!"

—பம்பாயில் அமெரிக்க டாக்டர் ஹோம்ஸ்.

இந்தியாவில் பிரசவிக்கும் தாய்மார்களில் 20 சதவிகிதம் பேருக்கு ஏற்படும் கதி இந்தப் புது யுகப்பிரசவத்தில் நாட்டுக்கு ஏற்படாமலிருக்குமாக.

* * * *

"லெபனனில் ஜெருசலேம் முப்தி எகிப்திலிருந்துரகசியமாகவந்திருக்கிறார்"

—பத்திரிகைச் செய்தி.

பத்திரிக்கைகளில் செய்தி வந்ததிலிருந்தே அதுமகா ரகசியம் என்பதுதெரியவில்லையா?

## கார்ப்பரேஷன் தேர்தல்

சென்னைக் கார்ப்பரேஷன் தேர்தலில் வழக்கமாகத், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியும், ஆந்திர காங்கிரஸ் கமிட்டியும், கலந்துபேசிச் சில டிவிஷன்களுக்குத், தமிழரையும், வேறு சில டிவிஷன்களுக்கு ஆந்திரரையும் நிறுத்துவது வாடிக்கை.

இப்போது, காங்கிரசுக்குள் ஆந்திரர்—தமிழர் பேதம் முற்றிவிட்டதால், தேர்தல், புதிய பிரச்னைகளைக் கிளப்பக்கூடும் என்று கவலைப்பட்டு, இம்முறை, சென்னைக் கார்ப்பரேஷன் தேர்தலில் காங்கிரஸ் அதிகாரபூர்வமாக அபேட்சகர்களை நிறுத்துவதில்லை என்று முடிவு செய்திருக்கிறார்களாம்.

தமிழர்களின் உரிமையைக் காப்பாற்றும்பொறுப்பைத், தோழர் முத்துரங்க முதலியார் ஏற்றுக் கொள்வதென்றும், அவருடையதலைமையிலே நிறுவப்பட்டுள்ள சென்னை நகர மக்கள் கணக்கெடுப்புக் கமிட்டியின் சார்பிலே, அபேட்சகர்கள் நிறுத்துவதென்றும், முடிவு செய்யப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது.

சென்னை தமிழருக்கே என்பது, தேர்தல் சுலோகமாக அமையுமென்றும், இந்தச் சுலோகத்தைக் குமாரராஜா சர். முத்தைய செட்டியாரும் ஆதரித்துக் கார்ப்பரேஷன் தேர்தலில் ஈடுபடப் போவதாகவும் தெரிகிறது.

## திருமணம்

19—10—47-ல் இலக்கடம்பூர்த் தோழர் உலகப்பனுக்கும் தோழியர் இராமாமிர்தம்மைக்கும் திருப்பூர் தோழர் S. R. சுப்ரமணியம் அவர்கள் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது.

ஆறுமுகநேரித் தோழர் சாது சுப்ரமணியத்துக்கும் தோழியர் கமலாவதிக்கும் 6—9—47-ல் தோழர் பாக்கியநாதன் அவர்கள் தலைமையில் திருமணம் நடந்தது.

## பிறப்பு

தோழர் K. அன்பழகன் அவர்களின் துணைவி வெற்றிச் செல்விக்கு 29—10—47ல் ஒரு பெண்குழந்தை பிறந்தது; தாயும் சேயும் நலம்.

# கிளிநிறம் பெற்ற கழுகு!

நீடாடோவோல் என்னும் இடத்திலே, பழங்குடி மூதாட்டி, போதக் கிணற்றிலே தண்ணீர் எடுக்கச் சென்றபோது, ஜாதி இந்துக்களால் தாக்கப்பட்டதுண்டா?

—B. S. மூர்த்தி.

* * * *

பழங்குடி மக்களுக்கு, சமூக உரிமைகள் தடைநீக்கச் சட்டம் நிறைவேற்றப் பட்டபிறகு, இந்நாள் வரையில் ஒரு கிணற்றிலேகூட அவர்களுக்கு உரிமை தரப்பட வில்லை என்பது உண்மையா?

V. I. முனுசாமிப்பிள்ளை.

* * * *

மலையாளத்திலுள்ள ஜென்மிகள் (பாபர்ப்பன ஜெமீன்தாரர்கள்) தங்கள் நிலங்களிலிருந்து, ஆதித்திராவிடர்களை விரட்டுகிறார்கள் என்பது உண்மையா?

V. I. முனிசாமிப்பிள்ளை.

* * * *

இப்படிச்சரமாரியாகக் கேள்விகள் கிளம்பின, சட்டசபையில்(அக்டோபர் 29-ல்)

கேள்விகளோடு விடவில்லை. பழங்குடிமக்களின் பிரதிநிதிகள், (அதிலும் காங்கிரஸ் காரர்கள்) தமது மக்கள்படும் துயர்பற்றி உருக்கமாகப் பேசினர்.

காங்கிரஸ் ஆட்சியிலே, எதை எதையோ எதிர்பார்த்து பழங்குடிமக்கள் ஏமாற்றம் அடைந்தனர் என்பதையும், அவர்களின் மனம்குமுறிக் கொண்டிருப்பதையும், அவர்களின் பேச்சு நன்கு எடுத்துக்காட்டிற்று.

"நாடு விடுதலை அடைந்து விட்டது. ஆனால் எங்கள் வகுப்பினரோ, ஜாதி இந்து முதலாளிகளின் பிடியிலே அதிகமாகச் சிக்கிவிட்டனர். முன்பு செய்து வந்ததைவிட அதிகக் கொடுமையாக, ஜாதி இந்து பண்ணை முதலாளிகள், பழங்குடி மக்களை நடத்துகிறார்கள். பழங்குடி மக்களோ, படிப்பற்றவர்கள், சிதறுண்டு கிடப்பவர்கள், எனவே அவர்களால் இந்தத் தாக்குதலைச் சமாளிக்க முடியவில்லை. அவர்களை முன்னேற்ற எடுத்துக் கொள்ளப்படும் முயற்சிகள், முளையிலேயே அழித்து விடப்படுகின்றன. பழங்குடிமக்களை, குடிசைகளிலிருந்து விரட்டுகிறார்கள். குண்டூர், கிழக்குக் கோதாவரி, மேற்கு கோதாவரி, ஆகிய இடங்களிலே, இருக்க இடமின்றி, உழ நிலமின்றி, பழங்குடிமக்கள், பரதவிக்கிறார்கள்.

சர்க்கார், இந்த நிலைமைபற்றி நன்கு கவனிக்க வேண்டும். இந்தக் கொடுமைகளைக்களைய உடனே தக்க நடவடிக்கை எடுக்காவிட்டால், நீதியை நிலைநாட்டுவதற்காக புரட்சி ஏற்பட்டுவிடும். தங்கள் சுயமரியாதையைக் காப்பாற்ற, பழங்குடி மக்கள், கடைசி மூச்சிருக்கும்வரை போராடித் தீருவர்.

நான் கூறுவது, சரியாக இருக்கிறதோ இல்லையோ என்று சர்க்கார் சந்தேகப்படுமானல், ஒரு கமிட்டி நியமித்தோ, தனி அதிகாரியை நியமித்தோ, நிலைமையைப் பரிசீலனை செய்து பார்க்கட்டும்." ஆந்திரத் தோழர் B. S. மூர்த்தி. அவர் பேசினது இது. ஒரு சமயம், அந்தப் பகுதியிலே மட்டும் இந்தஅக்ரமம் இருக்கிறது போலும்என்று எண்ணி விடவேண்டாம்.

இதோ, மற்றப்பகுதிகளின் நிலைமைபற்றி V. I. முனுசாமிப் பிள்ளை பேசுகிறார், கேளுங்கள். "நான் சின்னாட்களுக்கு முன்பு மலையாளம், தென்கன்னடம் ஆகிய பகுதிகளுக்குச் சென்றிருந்தேன். அங்கு அரிஜனங்கள் அல்லற்படக் கண்டேன். மலையாள நாட்டிலே, ஜென்மிகள், அரிஜன விவசாயிகளை நிலத்தைவிட்டு விரட்டுகிறார்கள். தென் கன்னடத்திலேயே, அரிஜனங்களை, அடிமைப்படுத்தி, விரட்டி விரட்டி அடிக்கிறார்கள், தோட்டத்துக்குத் தோட்டம்."

இவர்கள், தீவிரவாதிகள், எனவே பேசினர் என்றும் கூறிவிடுவதற்கில்லை. சனாதனதாசர் சகஜானந்தரும் விருத்தாசலம், கல்லக் குறிச்சி, சிதம்பரம் தாலூக்காக்களிலே, 'அரிஜனங்கள்' படுகிற அவதியை எடுத்துரைத்தார்.

சர்க்கார் சார்பிலே, மந்திரி கூர்மைய்யா பேசினார். அவர், மற்றவர்கள் கூறினதை மறுக்கவில்லை. வழக்கப்படி, 'சர்க்கார் பாஷையில்'—சர்க்கார் இதனை அறியும்—ஆவன செய்யப்படும்—கவனித்துக் கொண்டிருக்கிறோம்—கொஞ்சம் பொறுத்துக்கொள்ளவேண்டும்— உடனடியாகத் தீர்ந்து விடுமா—இப்படி அவர் பேசினார்! அமைச்சர்!! வேறு எப்படிப் பேச முடியும், பாபம். இது போல, பழங்குடிமக்களின் நிலைமை நாட்டுக்கு விடுதலையும், 'மக்கள் சர்க்காரும்' ஏற்பட்ட பிறகு, முன்னேறியதாகக் காணோம்—கொடுமைகள் வளர்ந்து கொண்டுள்ளன. ஏன்?

அரசியலிலே,'மக்களாட்சி' வந்து விட்டது என்று பேசப்பட்டும், புகழப்பட்டும் வருகிறது, சட்டங்களோ, முற்போக்குடையனவாக,

இதற்காக இயற்றப்பட்டுள்ளன.

எனினும் சஞ்சலம், குறையக் காணோம்—அதிகரிக்கிறது. ஏன்?

கழுகு கொல்லப்படவில்லை! கழுகு, கிளிநிறமும் உருவும் கொண்டு, வட்டமிடுகிறது!!

புத்தறிவு பரவி வருவதாலும், இந்து இனத்தவர் என்ற பட்டியலின் எண்ணிக்கை குறையுமே என்ற அச்சத்தாலும், சமூக அநீதிகளையும், மதத்தின் பெயரால் நடத்தப்படும் மாபாதகங்களையும் இன்னமும் சில மரமண்டைகள் மகத்துவம் என்று எண்ணினாலும், பலர், இவை ஆகாது, அடுக்காது என்று கூறுவதாலும், பழங்குடிமக்களுக்கு, சலுகைகள் காட்டவும், அன்புரை வழங்கவும், சட்டம் செய்யவும், காங்கிரசார் முன்வந்தனர். இது காங்கிரசிலுள்ள, வைதீகர்களுக்குத் துளியும் பிடிக்கவில்லை, என்றபோதிலும், காங்கிரசின் துணை கொண்டே தாங்கள் வாழமுடியும் என்பதால் ஏதோ, இதைத் தவிர்க்க முடியாத, வேப்பெண்ணையாகக் கொண்டனர். உண்மையான மனமாற்றம் ஏற்படவில்லை என்பதை விளக்கும் சம்பவங்கள் அவ்வப்போது நடைபெற்றபடி உள்ளன. அவைகளை அவ்வப்போது கண்டித்து விடுவதும், பிறகு மக்கள் அதை மறந்து விடுவதும், சகஜமாகி விட்டது.

கோயில்களிலே நுழையவும், குளங்களிலே நீராடவும், மற்றும், மக்கள் சமுதாயத்துக்கு உள்ள அடிப்படை உரிமைகள் யாவும், பழங்குடி மக்களுக்குக் கிடைக்கவும் வேண்டுமென்று சட்டம் செய்யப்பட்டுமிருக்கிறது. ஆனால் அவை, யாவும், பழங்குடிமக்களை வேறு எங்கும் போய்விடாதபடி தடுக்கும் முறைகளாயினவேயன்றி, அந்த மக்களின் முன்னாள் நிலையிலே, குறிப்பிடத்தக்க மாறுதல் ஏற்பட்டதாகத் தெரியவில்லை—இதனை, காங்கிரசுக் கட்சியல்லாத நாம் கூறும்போது, சோபம் வருவது இயல்பு. ஆனால், காங்கிரஸ் கட்சியினர், அதிலும் ஊர் பேர் தெரியாதவரல்ல, ஊராளும் சட்ட சபைக்குத் தலைவராக இருப்பவர், திருத்தலங்கட்குச் சென்று தெரிசனம் செய்தபோது நெஞ்சு நெக்கு நெக்குருக நின்றவர், பூசிய நீறும், அப்பிய சந்தனமும், கூப்பிய கரமும், குழையும் உடலுமாக இருந்து, 'போட்டோ' எடுத்து பத்திரிகைகளில் போடுபவர், ஆகிய திருக்கலியாண குணங்கள் யாவும் கொண்ட, சிவசண்முகம் சொல்கிறார், பழங்குடிமக்களின் பரிதாபகரமான நிலைமை இன்னும் மாறவில்லை, ஜாதிக் கொடுமை போகவில்லை, கோயிலைத் திறந்ததாலே பிரச்னை தீர்ந்துவிடவில்லை என்று. நாம் கூறினால், கோபம் வருவது இயல்பு! அவர் கூறும்போது? வெட்கம் வர வேண்டாமா? வேண்டுமென்றே கூறுகிறாரா? விதண்டா வாதியா? வேத நிந்தகரா? ஈரோட்டுப் பக்கம் செல்பவரா? அல்லவே! சதா காந்தி சேவா சங்கத்தின் சல்லாபத்தில் இருப்பவர்! சாஸ்திரிகளுடன் உலவுபவர்! அப்படிப்பட்ட சிவசண்முகம், அடிக்கடி மனம் நொந்து கூறுகிறார், ஆலயம் திறந்தும், அன்பு திறக்கவில்லை என்பதை.

அவர் போன்றார் கூறுவதை விட, தெளிவாக, நிலைமையை, சில சம்பவங்கள் விளக்குகின்றன, பழமையின் பிடி எவ்வளவு பலமாக இருக்கிறது, பழமைக்கொள்கை கொண்டவர்களிடம், கோணல் சேட்டையும் கொடுமைபுரியும் மனப்பான்மையும் எவ்வளவு ஆழமாக இருக்கிறது, என்பதை விளக்கும் சம்பவங்கள், நாகரீகமுறை வேண்டுமென்று கூறுபவர், கேட்டாலே, வெட்கித்தலை குனியக் கூடிய சம்பவங்கள்.

* * *

திமிர்! ஆணவம்!!

சர்க்கார் ஆதரவாம், இதுகளுக்கு! சர்க்காராவது கிர்க்காராவது! பிடித்துக் கட்டிவைத்து பிளிய மிலாரால் அடிக்கவேண்டும்!

தாரை! தப்பட்டை! இதுகள் கெட்டகேட்டுக்கு ஊர்வலமாம்! அதுவும், சேரியோடு போய்த்தொலைந்தால், சரி என்று இருந்துவிடலாம். ஊருக்குள்ளே, நாம் இருக்கும் தெருக்களிலே, எவ்வளவு நெஞ்சழுத்தம், இதுகள் ஊர்வலம் வரப் போகுதுகளாம்!

போகட்டும் போகட்டும் என்று விட்டதாலே வந்த வினையப்பா இது. இதுகளை இன்று தீர்த்துக் கட்டிவிட வேண்டும். இன்றகொடுக்கிற 'பூஜை' ஜென்மஜென்மத்துக்கும் இருக்க வேண்டும், கவனம். ஆமாம்! டேய்! எடு, தடிகளை! அறிவாளையும் கொண்டுவா! டேய்! பயல்களா இன்று உங்களுக்கெல்லாம், நல்ல வேட்டை! அந்தக் குப்பல், நம்ப தெருப்பக்கம் வந்ததும், 'விற் விற்'றென்று, மலைப்பிஞ்சுகளை வீசவேண்டும் தெரிகிறதா! பலே! பேஷ்! சரி; சபாஷ்!!

* * *

மலை ஜாதியினரல்ல, கள்ளர் கூட்டமல்ல, வெறியரல்ல குடியரல்ல, பித்தரல்ல, நாகரீகமாக வாழ்க்கை நடத்தும் மக்கள், இது போலக் கூவிக்கொக்கரித்து ஆர்ப்பரிக்கின்றனர்! நந்தன் நாட்களிலா? அல்லவே! இன்று! காங்கிரசாட்சி இல்லாத இடத்திலா? அதுவுமல்ல! காங்கிரசாட்சியில் உள்ள இடத்திலேதான்! ஏன்? காரணம் தேவையா? இதோ, ஊரின் மற்றோர் பகுதியிலே உள்ள நிலையைக் காட்டுகிறேன் பாருங்கள். அதுதான் காரணம்.

* * *

சேரியோடு நிறுத்தி விடலாமே!

ஏம்பா! ஏன்! இப்போ நம்மைத் தடுக்க, யாரும் கிடையாது. அதெல்லாம், அந்தக்காலம்— நம்மபாட்டன்மார்காலத்திலே. இதுசுயராஜ்ய காலம்.

சுயராஜ்யமானாகூட, நம்ம நிலை, மாறிவிட்டதுன்னு என்னப்பா அர்த்தம்?

நீ, கிணத்துத்தவளை! நாட்டிலே இருப்பது தெரியாது. முன்னே போல, பிற்போக்காளர் ஆண்டு கொண்டில்லே! இப்போதுகாங்கிரஸ் மந்திரிகள் ஆட்சி நடத்துகிறகாலம்.

அதுவும் தெரியும். ஆனாலும், நாட்டுக்கு நல்லதுரை வந்தாலும், தோட்டிக்குப் புல்லுசுமைபோகாதே.

யார் சொன்னது? இப்பநம்மஜாதியார், மந்திரியாகக்கூட இருக்கிறாரு, நீ ஒரு பயங்காளி மனுஷன். புறப்படுங்கப்பா! ஊருக்குள்ளே, ஊர்வலமாகப்போகலாம். தசரா கொண்டாடினா, தவறா? ஒவ்வொரு ஊரிலே, சேரிக்கு, மந்திரிகளும், ஊர்ப்பெரியவர்களும், வந்திருந்து, நம்ம ஜாதி மக்களுக்கு மாலை சூட்டி மரியாதை செய்து சந்தனம்பூசி, மேள தாளத்தோடே, பஜனை, பாட்டோடு, கோயில்களுக்கு அழைத்துச்சென்று கும்பிடச் சொல்லி, பிரசாதம் கொடுத்து அனுப்பியிருக்காங்க. சட்டம் செய்துவிட்டாங்க—இனி நம்ம ஜாதியார், எந்தக்கோவிலுக்கும் தாராளமாகப் போகலாம்— யாரும்

தடுக்க முடியாது.

சரி. அதனாலே............?

அதனாலேன்னு, இழுத்துப்பேசு கிறயே! கோயில்களிலே எல்லாம் நுழைகிறபோது ஊருக்குள்ளே, ஊர் வலம்நடத்தினா, தடைசெய்வார்களா? அதிலேயும், இது தசராபண்டிகை ஊர்வலம்! தசரா, இந்துக்களின் பண்டிகை! நாமும் இந்துக்கள்! நீ சொல்வதிலே நியாயம் இல் லேன்னு சொல்லவில்லையே.

நியாயம் இருககும்போது பயம் ஏன்?

இப்படிப் பேசிக்கொண்டு, பயம் கூடாது என்றுதான், பழங்குடி மக் கள், தசரா ஊர்வலம், நடத்தக் கிளம்புகிறார்கள்.

* * *

இரண்டு வட்டாரத்து பேச்சும் நடவடிக்கையும் கண்டு, அவ் ஊர் போலீசாருக்குப் பயம் ஏற்பட்டது.

"கான்ஸ்டபிள்! ஊர்வலம் நடத் தத்தான் போகிறார்களா?

"ஆமாம்! ஊருக்குள்ளே போகத் தான் உத்தேசிக்கிறார்கள். தசரா பண்டிகையாம்"

"உண்மைதான்.ஆனால், ஊரிலே உள்ள 'மேல் ஜாதிக்காரர்கள்',

"மேல் ஜாதி கீழ் ஜாதி, என்ற பேச்சு சுயராஜ்யத்திலே ஏதுஎன்று பேசுகிறார்கள்"

"ஊரிலேயா?"

"இல்லேங்க—சேரியிலே"

"அதுதான் தெரியுமே. ஊரார், ஊர்வலத்தைப்பற்றி என்ன பேசிக் கொள்கிறார்கள்?"

"ஊரிலே, ஒரே கொதிப்புதான்- ஆத்திரந்தான்."

"அதுதான் பயமாக இருக்கிறது என்ன நடக்குமோ என்று."

* * *

இப்படி போலீஸ் அதிகாரி பயப் படுகிறார்— மிகச் சாதாரண விஷயம் என்று நமக்கெல்லாம், தோன்றுகிற விஷயத்துக்கு. பயப்பட்டதோடு இல்லை. அவர் நேரிலேயே சென்று, அந்த 'மேல் ஜாதிக்காரரை'க் கண்டு பேசினாராம். என்ன பேசியிருப்பார். யூகித்துப்பாருங்களேன்!

கடைசியில் என்ன நடைபெற் றது? ஆப்ரிக்காவிலே இந்தியரை இழிவு படுத்தும் ஸ்மட்ஸ், சிரிப் பான், நடந்ததைக் கேள்விப் பட்டால்.

ஊர்வலம் சென்றது ஊருக்குள். அவ்வளவுதான்! கல்மாரி!! ஒரு பெருங் கூட்டம், இரண்டாயிரம் பேர்களிருக்குமாம், பழங்குடிமக்கள் மீது கற்களை வீசியும், கழி கொண்டு தாக்கியும், வழி மறித்து அடித்தும்! வெறியாட்டமாடினராம்.

தசரா ஊர்வலம்! 'ஜாதி இந்துக் கள்' என்பவர்களின் போக்கு இது. போலீஸாரின் நிலைமை கஷ்டமாகி விட்டது. நல்லுரை பலிக்கவில்லை. தடியடி, பலன் தரவில்லை. கடைசி யில், வெறிக்கூட்டத்தின் மீது துப் பாக்கிப்பிரயோகமே செய்யவேண்டி நேரிட்டது— இருமுறை. வேட்டு கிளம்பின பிறகே, வெறியர்கள் பின் வாங்கினர். இதற்குள் நிலைமையைச் சமாளிக்க, கலெக்டர், போலீஸ் சூபரிண்டு, ஆகியோர் வரவேண்டி நேரிட்டது. நாற்பது பேருக்குமேல் காயப்பட்டனர். இவ்வளவுக்குப் பிறகு, பலத்த போலீஸ் பந்தோ பஸ்துடன், தசரா, ஊர்வலம் நடந்தேறியது.

* * *

எல்லாம், எப்போது? ஜக்ஜீவன் ராம், சிவஷண்முகம், கூர்மையா, ஆகியோருக் கெல்லாம், காங்கிரசில் இடம் கிடைப்பதற்கு முன்பு, ஆல யப்பிரவேசச் சட்டம் வருவதற்கு முன்பு, என்று எண்ணிவிடாதீர்கள். சம்பவம், இந்தமாதம் 23-ந் தேதி நடைபெற்றிருக்கிறது. நமது மாகா ணத்தில், பெல்லாரிக்கு அருகே!! விசாரணையும் நடைபெற்று வருகிறது.

* * *

இந்த வெறிச் செயலுக்குக் கார ணம் என்ன? எப்படி இந்த மனப் பான்மையை மாற்றுவது? என்பது பற்றி, தீவிரவாதிகள் நிச்சயமாக யோசிக்க வேண்டும். பல காலமாக ஊறிப்போன கொள்கைகளை, சட் டத்தால் மாற்றிவிட முடியவில்லை. அப்படியானால் சட்டமே கூடாதா என்றால், சட்டம் கட்டாயமாக வேண்டும் — இருந்ததால் தான், வெறிச் செயலை வேட்டுக்கிளப்பி அடக்க முடிந்தது. இல்லையானால், பழங்குடிமக்கள் பலபேர், இப்படிப் பட்டசமயத்தில் படுகொலை செய்யப் பட்டிருப்பார்கள்.

சட்டம் வேண்டும் — ஆனால் சட் டம் மட்டும் போதாது.

இன்று நம்மக்களுக்கு ஒரு பெரிய மனக்குழப்பம் - அவர்களைத் திகைக் கச் செய்யும் அளவுக்கு இருக்கிறது.

ஒரு புறத்திலே, பல்வேறு கார ணங்களுக்காக, நாடாள்பவர்கள், நாகரீகஉலகின்கண்முன் நல்லபிள்ளை களாக உலவவேண்டுமென்று, முற் போக்கான, ஜாதிக்கட்டுகளை அறுக் கிற, பழமைக் கட்டுகளைத்தகர்க்கிற, சட்டங்களைச் செய்கிறார்கள்.

அதேபோது வேறோர் புறத்தி லேயோ, ஜாதிக்கட்டு, குலப் பெருமை, பொதுவாகவே பழமை முழுவதும், மக்களுடைய அன்றாட வாழ்க்கையிலே, கலக்கப்பட்டு வந்த வண்ணம் இருக்கிறது.

இந்த இரண்டு தாக்குதல்களுக் கிடையே, சிக்கிய மக்கள் மனம் என்ன கதியாவது?

யாராக இருந்தாலும் சரி, கோயி லுக்குள் போகலாம்—சட்டம் கூறு கிறது.

என்ன இருந்தாலும் சரி, பழய முறையை விட்டு விடுவதா—பழமை கூறுகிறது.

பழமை, மக்கள் அன்றாடம் கண்டு குலவும் தோழன், சட்டம் மக்களை மிரட்டும் அதிகாரி!

ஆகவேதான், அதிகாரிக்கு அஞ்சு வதும், அவன் அறியாதபோது, தோழனுடன் குலவுவதுமாக, மக் கள் உள்ளனர்.

பழமை, மக்கள் தாமும் கோயில் கள், அவைகளைப்பற்றிய கதைகள் காவியங்கள், ஓவியம், புராணம் இதிகாசம், அவர்கள் கேட்கும் பாட்டு, பார்க்கும் கூத்து, கொண் டாடும் பண்டிகை, ஆகிய பலவழி களிலும், ஊட்டப் படுகிறது. எனவே, மக்கள், அதன் வயப்பட்டு, மனவலியும் குன்றிக்கிடக் கின்றனர். அதே போது, புதுச்சட்டமும்பிறக் கிறது. இந்த இருதாக்குதலால், ஏற் கனவே, நைந்திருக்கும், உள்ளம் மேலும் நைந்துவிடுகிறது.

பழமையின் ஆதிக்கத்தை, மக் களிடை புகுத்தும் சாதனங்களை அழித்தொழித்தால், பெல்லாரிகள் நடைபெறாது — சட்டம் மதிக்கப் படும்—சப்இன்ஸ்பெக்டர் கூடப் போதும், கலெக்டர் வரவேண்டிய நிலைமை ஏற்படாது. 'ஓட்டையை'

மூடாமல், ஓயாமல் நீர் மொண்டு, கொப்பரையில் நிறப்பினென்னபலன்? விழியின் பழுதைச் சரிப்படுத்தாமல் மொழி அழகுமூலம், அவனுக்கு வழிகாட்டலாம் என்று எண்ணினால் பலிக்குமா! புலியைச்சாகடிக்காமல், அது கடித்து இரணம் உண்டானால், அது தீரமருந்து தருகிறேன் என்று சொல்வது அழகா! பாம்பைப்புற்றிலே விட்டுவைத்துவிட்டு, பக்கத்திலே, பசும்புற்றரையிலே அழகிய பளிங்காசனம் அமைத்துப் பயன் என்ன? ஏமாந்த நேரத்தில், பாம்பு, புறப்படக்கூடுமே!! பெல்லாரியிலே புறப்பட்டதே! விசாரணை நடத்துகிறோம் என்கிறார்கள்! ஒவ்வோர் முறையுந்தான் நடத்தினார்கள். தண்டித்தனர். ஆனால், மீண்டும் மீண்டும் தலைதூக்கியபடி தானே இருக்கிறது பழமை.

பழமையைப் புகுத்தும் கதைகள், முறைகள், ஒழிக்கப்பட்டு, மக்கள் மனதிலே படிந்துள்ள மாசு துடைக்கப்பட்டு விட்டால், துப்பாக்கி வேண்டாமே! ஏன், சர்க்கார் அந்த, பழமை ஒழிப்புப் பிரசாரத்தைச் செய்யவில்லை. செய்யாமுன்னம், மக்கள் மனதைக் குழப்புவதன்றி வேறென்னபலன் காணமுடியும்.

மற்றொன்று, இத்தகைய விசாரணைகளை, வெறும், கலகக்குற்றம், அல்லது காலித்தனம் செய்தகுற்றம், என்ற அளவிலே நடத்தி, அதற்கு ஏற்ற தண்டனை தந்து பயன் இல்லை. சமூகக் கொடுமைபுரியும், காட்டுமிராண்டிகளை, தங்களையொத்த மக்கள், வீதியிலே நடப்பதுகண்டு மனம் பொருதமாமிசப்பிண்டங்களை, போலீசார் பகுத்தறிவு படைத்த பொது மக்களிடம் அனுப்பிவைக்க வேண்டும், கண்டனம் பெறவும், தண்டனை பெறவும். ஒரு ஊரில் மட்டுமல்ல, ஊருருக்கும் இத்தகைய 'உலுத்தர்கள்' அனுப்பிவைக்கப்பட்டு, ஊர்ப்பொது இடத்திலே அவர்களை நிறுத்திவைத்து, ஊரார் காணச் செய்து,

நாட்டிலேஉள்ளகாட்டுமிராண்டிகள். மக்களை மிருகமென நினைக்கும் கோடியர்கள். மக்கள் அனைவரும் சமம் என்பதைமறந்த மதியிலிகள்.

மனுகாலத்துப் பொய்யை நம்பும் மரமண்டைகள்.

வெறிச் செயல்புரியும் வீணர்கள். என்று மக்களைக்கொண்டு அவர்களை ஏசச்செய்து, புத்தி பிறக்கச் செய்யவேண்டும். நல்லறிவுள்ளோர், தம்மைக் கண்டிப்பர், மனிதரென்றும் மதியார், என்பது, இவர்களுக்கு பதியவேண்டும்.

சமூக அநீதி இழைக்கும் இவர்களை, வெறும் சட்டப் பிரச்னையாகக் கருதுவதும், நூறு ரூபாய் அபராதம், ஒரு மாதம் சிறைத் தண்டனை என்பதுமான முறையிலே இவர்களை நடத்துவதும் பலன் தராது. இவர்கள் சமூகச் சனியன்களாகக் கருதப்பட்டு, சமூகத்திடம் ஒப்படைக்கப்படவேண்டும் — அனைவரும் சமம், பிறவியில் உயர்வு தாழ்வு கற்பிப்பது பேதமை என்ற நல்லறிவும் நன்னோக்கமும் கொண்டவர்களிடம் இவர்கள் நிறுத்தப்பட்டு, விசாரணை நடத்தப்பட வேண்டும். அப்போது தான், இவர்களின் அறியாமையும் ஆணவமும் அடியோடு ஒழியும். அதேபோது, உண்மையிலேயே, புது முறைச் சமுதாயம் சமைக்கப்பட வேண்டும் என்பதிலே அக்கறை இருக்குமானால், சர்க்காரும், சர்க்காரை நடத்தும் கட்சியும், சட்டங்கள் செய்வதும், அதற்கு வியாக்யானம் கூறுவதும், அதை நடத்தி வைக்க அதிகாரிகளை அமர்த்துவதுமாகிய காரியத்தோடு, நின்று பயனில்லை. எந்தப் பழமையின் காரணமாக, சமூக இழிவுகள், கொடுமைகள், அநீதிகள் ஏற்பட்டனவோ, அவைகளை ஒழிப்பதற்கு, அந்தப் பழமையை ஒழிப்பதுதான் ஒரே வழி என்பதை உணரவேண்டும். உணர்ந்து, பல்வேறு வழிகளாலும், பழமை புகுத்தப்படுவதைத் தடுத்தாகவேண்டும். மதுவிலக்குச் சட்டம் செய்துவிட்டு, கள்ளச் சாராய விற்பனையைக் கண்டும் காணாதுவிட்டால், பலன் என்ன? அதுபோலவே, சமுதாயக் கொடுமையை ஒழிக்கச் சட்டம் இயற்றிவிட்டு, பேதத்தைப் போக்கச் சட்டம் செய்துவிட்டு, பேதத்தைமூட்டி, இழிவை ஏற்படுத்தும், பழமைப் பிரசாரத்தை, சாதனத்தை, அழிக்காதிருப்பது, பலன் தராது. நாடாள்வோர், இதைநன்கு யோசிக்கவேண்டும் — நாடாள்வோரின் கட்சியினர் இதை இன்னும் சற்றுத் தீவிரமாக யோசிக்க வேண்டும்.

கழுகு கிளிநிறம் பெற்றால், என்னபலன்? குணம், மாறாதே! குணம் மாறாதது மட்டுமல்ல, கழுகு பழய உருவுடன் இருந்தாலாவது, கண்டதும் நமக்கு விளங்கிவிடும், இது விரட்டப்படவேண்டிய பட்சி என்று! பச்சைப் பசேலென்ற மேனியும், பவளநிற மூக்கும், செவிக்கினிய குரலும் கொண்டால் பச்சைக் கிளி என்றெண்ணி இச்சைப்பட்டு, கொஞ்சிடுவோம், ஆனால், என்ன செய்யும், கழுகு? சமயம் பார்த்து பெல்லாரி செய்யும்! இன்று நடைபெற்ற சட்டக்காலானசீர்திருத்தம், இந்தஅளவிலும் வகையிலுமே இருக்கிறது. பச்சைக்கிளி என்ன! பஞ்சவர்ணக் கிளி உருவத்திலே வந்து கொஞ்சுகிறது, பழமை!!

✲

## காவடி தூக்கி

8-ம் பக்கத் தொடர்ச்சி

தால்!........எவ்வளவு இருந்திருக்கும் எதிர்ப்பு! இன்று அவ்வளவு இல்லை! ஏன்? இந்தச் சமயத்திலேதான், சுயமரியாதைக்காரர்களாகிய நாங்கள், பெருமை கொள்கிறோம், பூரிப்படைகிறோம்—சரி—நமது பிரசாரம் வீண் போகவில்லை—தெளிவு பிறந்துவிட்டது—நாடு தயாராகிவிட்டது—சட்டசபைகளிலே நாம் நடமாடாவிட்டாலும் நமது எண்ணங்கள் படை எடுத்துவிட்டன—என்று எண்ணிப் பூரிக்கிறோம்." என்று தோழர் அண்ணாதுரை, பேசியதுடன், இனாம்தாரி முறையை நஷ்டஈடு தராமலேயே ஒழிக்கவேண்டும், என்று வற்புறுத்திக் கூறினார். தீர்மானங்கள், இது போலவே நிறைவேற்றப்பட்டன.

இந்த மசோதா, சட்டமாகும் வரையில், இடையே, கமிட்டி பரிசீலனை முதலிய பல காரியங்கள் இருப்பதால், அவ்வப்போது, இதனைக் கவனிக்கவும், ஜெமீன்தாரர் இனாம்தாரர் ஆகியோர் இந்த மசோதாவை உருக்குலைத்துப் பயனற்றதாக்கி விடாதபடி பார்த்துக்கொள்ளவும், இந்த மசோதாவை, எதிர்த்த 76 பேர்களை அம்பலப்படுத்தவும், ஆனகாரியங்களைக் கவனிக்க, தமிழ்நாடு ஜெமீன் இனாம் ஒழிப்புக் கமிட்டி என்று ஓர் சிறு குழு அமைக்க வேண்டும் என்பது பற்றி, மாநாடு முடிந்த பிறகு நடந்தஉரையாடலின் போது யோசனை கூறப்பட்டது. அதற்கான அமைப்பு வேலையும் துவக்கப்பட்டிருக்கிறது.

# ★ நெசவாளர் நிலை ★

[S. V. இலிங்கம்]

நமது மாகாண நெசவுத் தொழிலின் இன்றைய சீர்கேடான நிலைக்குப் பல காரணங்கள் ஏற்பட்டுவிட்டன. ஒவ்வொரு ஆண்டிலும் புது விதமான தொல்லைகள் வளர்ந்து வருகின்றனவேயன்றிச், சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாக ஆரம்பித்த தொல்லைகளில் ஏதும் மறைந்ததாகவோ, மறையக்கூடும் என்பதற்கான அறிகுறிகளோ ஏற்படவில்லை. இன்றைய நிலையை இனியும் நீடிக்க விட்டு விடக்கூடாது. நீடித்தால் அடுத்த இரண்டாண்டுகளில் மிகப் பயங்கரமான நிலை, நெசவுத் தொழிலாளிக்கும், கை நெசவு ஜவுளி வர்த்தகர்கட்கும் ஏற்படும். அந்தப்பயங்கர நிலை நாட்டின் அமைதியை அடியோடு குலைக்கும். நெசவுத் தொழிலுக்குத் தீங்கு ஏற்பட யார் யார் காரணம் என்பது போன்ற வீண் வாதத்தில் நாம் கவனம் செலுத்த விரும்பவில்லை. அது பயனற்ற வேலையாகும். கைநெசவுத் தொழிலை வளர்க்க, கைராட்டின நூலையும், கைத்தறியையும் புனருத்தாரணம் செய்யக் காந்தியார் இருபத்தைந்து ஆண்டுகட்குமுன்முயன்றார். ஆனால், இருபத்தைந்து ஆண்டுகட்கு முன் இல்லாததான இருநூற்றைம்பது பெரும் பெரும் நூல், நெசவு மில்கள் உண்டானதைத் தான் பார்த்தோம். கைத்தறி வளரவில்லை. இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு, நமது மாகாணத்திலிருந்து வெளிமாகாணத்துக்குச் சென்ற ஜவுளியை விட, நாளாவட்டத்தில் வெளி மாகாணத்துக்குக் கைத்தறி ஜவுளி செல்வது தடைபட்டுவிட்டது.

இந்த நிலை யுத்தகாலத்துக்கு முந்திய நிலையாகும். யுத்தம் நின்று இரண்டாண்டுகளாகியும் வெளிமாகாண ஏற்றுமதியோ வெளிநாட்டு ஏற்றுமதியோ கைத்தறி ஜவுளிக்கில்லை. அடுத்தடுத்த வருடங்களில் நிலைமை சீர்பட வழி ஏற்படுமென்று எண்ணவும் இடமில்லை.

காந்தியாருக்கு அடுத்த படியாக நமது மாகாணசர்க்கார் பத்து ஆண்டுகட்கு முன்பு கைத்தறி ஜவுளி வளர்ச்சியில் கவனஞ் செலுத்தினார்கள். முன்னைய காங்கிரஸ் ஆட்சியிலும், அட்வைசர் ஆட்சியிலும், இன்றைய காங்கிரஸ் ஆட்சியிலும், மாகாண சர்க்காரின் அதிகாரத்தை நடத்தும் மந்திரிகள், கைத்தறித் தொழிலை வளர்க்க அவரவர்கள் சக்திக்குத தக்க முயற்சிகளைச் செய்து வருகிறார்கள். இது போதாதென்று, மொழிவாரியாகவும், கட்சி வாரியாகவும் பெரும்பான்மையான இடங்களில கைத்தறி நெசவுத் தொழில் சங்கங்களும் ஏற்பட்டுப் படாதபாடுகள்பட்டு வருவதையும் பார்க்கிறோம். காந்தியார் 1920-ல், இந்த நாட்டு அதிகாரம் வேண்டும்—வெள்ளையன் வெளியே போகவேண்டும்-கைராட்டினமும் கைத்தறியும் வளரவேண்டும் என்றார். போகாத வெள்ளையனே போய்விட்டான். ஆனால், பரிதாபத்திற்குரிய கைத்தறிக்காரர்கள் நிலை மோசமாகிக்கொண்டே வருகிறது. இதற்குக் காரணம் என்ன? இதனை இனியாவது கைத்தறி நெசவாளி சிந்திக்க வேண்டாமா?

மாகாணத்திலுள்ள கைத்தறிகள் ஐந்து லட்சமா மூன்று லட்சமா என்பது நமது விவாதமல்ல. இவ்வுபகண்டத்திலுள்ள கைத்தறிகளில், மாகாண வாரியாக எடுத்துக்கொண்டால், நமது மாகாணத்தில் தான் கைத்தறிகள் அதிகம். மாகாணத்தில் மொழி வாரியாக எடுத்துக்கொண்டால், தெலுங்கு—மலையாளம்—கன்னடம்ஆகியமாவட்டங்களைவிடத், தமிழ் நாட்டில் தான் கைத்தறிகள் அதிகம். 1945-ம் ஆண்டுச்சர்க்கார் கணக்குப்படி, தெலுங்கு நாட்டில் ஒன்றரை லட்சம் கைத்தறிகளும், தமிழ் நாட்டில் மூன்று லட்சம் கைத்தறிகளும் இருக்கிறது.

மூன்று லட்சம் தறிகள் நமது தமிழ் நாட்டில் என்றால், இத்தொழிலை வளர்க்க உபகருவிகள் தயாரிக்கும் குடும்பம் ஒன்றரை லட்சத்துக்கும் குறையாது இருக்கும். இத்தொழில் வளர்ச்சிக்கான வர்த்தகத்தில் சம்பந்தப் படுத்தப்பட்டோர் ஒரு அரை லட்சம் இருக்கமுடியும். குறைந்தபட்சம் நான்கைந்து குடும்பம் சம்பந்தப்பட்ட ஓர் தொழில் கருகிக்கொண்டே வருவதைப் பார்த்துக் கொண்டிருப்பது நியாயமல்ல — முறையுமல்ல. மாகாண சர்க்காரும், மில் முதலாளிகளும், ஜவுளிவர்த்தகர்களும் ஒன்று சேர்ந்து, உள்ளநிலைமையைப் பரிசீலனை செய்து, இன்றைய நிலைமைக்குத் தக்கதோர் பரிகார முறையைக் கையாள வேண்டும். இம்மூவருடைய கவனமும் இதில் ஒன்றும் மார்க்கத்தைக் கைத்தறிக்காரர்களே செய்யவேண்டும்.

இது வரை வளர்ந்து வந்த துன்பம் போதாதென்று, நெசவுக் கூலி நிர்ணயமும், நெசவுத் துணிக்குச் செக்கிங் ஆபீசரும் உண்டாக்கப்படுமாம். மத்திய சர்க்காரும், மாகாண நெசவு மில் முதலாளிகளும்சேர்ந்து, அடுத்த ஆண்டிலிருந்து மெல்லிய, 100—80—60-ம் நம்பர் நூல்களைக் கைத்தறிக்காரர்களுக்குக் கொடுக்காமல் நிறுத்தக் கூடும். ஏனென்றால், கோயமுத்தூர் மில்கள் 40-ம் நம்பர் நூலைத் தவிர வேறு நூல் நூற்பதில்லை என்று முடிவு செய்யப்போகிறது. இதனால், நெசவாளியின் வருவாய் குறையும் என்பதோடு, கோயமுத்தூர், சேலம், காஞ்சிபுரம், திருச்சி, தஞ்சைமுதலிய மாவட்டங்களில் உள்ள அறுபதினாயிரத்துக்கு மேற்பட்ட கைத்தறிகளில் பாதிக்கு மேல் உடனே பாதிக்கப்படும். இந்த நாட்டின் கைத்தறித் தொழிலானது எப்படிப்பட்டது என்பதை உணராதவர்களின் மேற்பார்வையில் கைத்தறித் தொழில் வளர வேண்டியிருக்கிறது.

தெலுங்கு நாட்டில் உள்ள கைத்தறிக்காரர்கள்நிலை, தமிழ்நாட்டாரை விடச் சற்று மேல் என்று கூறலாம். இதனால், அவர்களுக்கு, நமக்கிருக்கும் கஷ்டம் இல்லைஎன்பதல்ல. அவர்களுடைய கைத்தறிச் சங்கங்கள் நல்ல பலமுடையன. இன்றைய நிலையில் கைத்தறித் தொழிலில் உள்ளோர் தங்களிடமுள்ள கட்சி வேறுபாடு, ஜாதி வேறுபாடு இவைகளைச் சற்று விலக்கி விட்டுத், தங்களின் சுயநலம், வீண்பெருமை, இவைகளையும் சில நாட்களுக்காவது தள்ளி வைத்துவிட்டு, ஒன்று கூடி ஓர் முடிவுக்கு வரவேண்டும், இம்முயற்சியில் ஆர்வமுடைய தோழர்கள் தங்கள் கருத்தையும் ஆதரவையும், ஆலோசனைகளையும் தெரிவிக்கக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

# எண்ணிப்பார்க்க வேண்டாமா?

★

சமஸ்கிருதம், பேச்சு வழக்கிலிருந்து ஒழிந்துபோனதால் அதனை "இறந்த மொழி" (Dead Language) என்று பல மொழி ஆராய்ச்சி வல்லுனர் தக்க ஆதாரங்களோடு கூறிப் பன்னெடுங் காலமாயின. என்றாலும், சிலர், இன்றும் கூட அதனை உயிர் மொழி அதாவது பேச்சு வழக்கில் இருக்கும் மொழி என்று கூறும் தங்கள் பழைய பாட்டை விட்டபாடில்லை. சமஸ்கிருதத்தினிடத்துப் பற்றுக்கொண்டுள்ளவர்கள் அதனைப் போற்றி வளர்ப்பதில் நமக்கொன்றும் தடையில்லை. ஆனால், சமஸ்கிருதத்தின் துணைகொண்டு, தமிழ் மக்களின் நாகரிகத்தைக் குலைத்து, வர்ணாஸ்ரம முறையைப் புகுத்தி, அதனால் பிளவையும் ஒற்றுமையின்மையையும் ஏற்படுத்தி, ஒரு சிலர் தங்கள் ஆதிக்கத்திற்கு அரண் தேட முயலும் போக்கினையே நாம் கண்டிக்கிறோம், என்று பலமுறை விளக்கியுள்ளோம்.

தமிழ் நாட்டில் பிறந்தும், தமிழ் மொழிபயின்றும், தமிழரெனச் சொல்லிக் கொண்ட போதிலும், தமிழ்மொழி மூலம் பிழைத்துவந்தாலும், தமிழிலே பண்டிதரெனப் பட்டம் பெற்றாலும், சங்கநூல் கற்றாலும், பார்ப்பனர்கள் தமிழிடத்தில் அன்பு கொள்வதில்லை. அதனைத் தம் தாய்மொழி எனக் கருதுவதில்லை. அவர்களின் எண்ணமெல்லாம் வடமொழியாகிய சமஸ்கிருதத்தின் மீது தான். அதைத்தான் அவர்கள் போற்றுவர். அதன் "உயர்வை"த் தான் உணர்வர். அதனிடத்தில் தமக்குள்ள "காதலை" சில நிமிடங்கள் குளத்தங்கரையில் உட்கார்ந்து கொண்டேனும் ஒரு மூச்சு அழுது பார்த்துவிடுவர். அதற்குக் காரணம் அவர்கள் தம்மை ஆரியரென எண்ணிச் சமஸ்கிருதத்தை ஆரிய மொழியெனக்கொண்டு, அது பிறமொழிகளைவிட மேன்மையானது எனவும் கூறி, அதனைத் தேவபாஷை எனக் கருதுவதுந்தான். தங்கள் நல்ல கெட்ட காரியங்களுக்கும், பூசைக்கும், வடமொழிதான் உபயோகிப்பர். அம்மட்டோ! அந்த மொழியையே பிறரும், வாழ்க்கையின் மிக முக்கியமான சமயங்களில் உபயோகிக்க வேண்டுமென்ற வழக்கத்தையும் புகுத்தி விட்டனர்.

நாள் முழுதும் நாம் பேசுவது, படிப்பது, எழுதுவது தமிழ். நாம் கேட்கும் ஒலி அவ்வளவும் தமிழ்! நமது கொஞ்சுதலும் கூடிக்குலாவுதலுமான வேளையிலே தமிழே நமது மொழி. ஆனால் அம்மொழி நமது கலியாணத்துக்கு உபயோகமாவதில்லை. சாஸ்திரிகள் அழுத்தமும் திருத்தமுமாக, அகார ஓகார அலங்காரத்துடன், அழுகுரலோ, அலறலோ ஏதோ என நாம் மருளும் ஓசையுடன், ஏது அவர் சொன்னாரோ, எதுவோ அதன் பொருள் ஏதுமறிகிலோமே, என்று நாம் ஏங்கும் விதத்திலும், சமஸ்கிருத சுலோகமோ மந்திரமோ கூறினால்தான், கலியாணம் முடியும்! அதுமட்டுமா! ஆண்டவனுக்கும் நமக்கும் இடையே, அம்மொழியிலேயே 'ஐயர்' பேசி அருள் வாங்கித்தருவார். எனவே, என்ன தான் தமிழின் மேன்மை, தொன்மை முதலியன பற்றிப் பேசினாலும், எவ்வளவு ஏடுகளைத்தேடிப் பிடித்துப்பதிப்பித்தாலும், மடத்தில் பயின்றாலும் 'மகாவித்வான்' ஆனாலும், எத்தனை விருத்தியுரையும் விளக்க உரையும் எழுதினாலும், சமஸ்கிருதத்தின் மீதுதான் பார்ப்பனர் தமது உயிரை வைத்துள்ளார்கள். சமயம் நேரிடும்போது அதற்குத்தான் சலுகை காட்டுவார்கள். உயர்வும் உரிமையும் அதற்கே தருவார்கள். பரணையில் இருப்பினும், பதவி ஏதேனும் வழங்கும் சமயம் கிட்டினால், அன்புடன் சமஸ்கிருதத்திற்கே ஆக்கம் தருவர். "எமது மொழி! எம்மை உயர்த்திய மொழி! பரந்த திராவிட நாட்டில் எம்மைக் குருமாராக்கிய மொழி உயர்ஜாதிக்காரராக எம்மை உயர்த்திய மொழி! பிறரை அடிமைகொள்ள உதவிய மொழி. அம்மொழிக்கு ஆக்கமெனில் எமக்கே ஆக்கம். அம்மொழி அழிந்ததெனில் எமது உயர்வுக்கே அழிவு" என்ற எண்ணம் பார்ப்பனர் மனதைவிட்டு அகன்றதேயில்லை. அவர்கள் அவ்விதம் எண்ணுவதில் தவறுமில்லை. தம்மை உயர்த்திக்கொள்ளவும், பிறரை அடிமை கொள்ளவும் சமஸ்கிருதந்தான் அவர்களுக்கு உதவி தந்தது. கங்கை நதி தீரத்திலிருந்து கன்னியாகுமரி வரையிலே அவர்களை, காவலரையும் ஏவலராகக்கொள்ள, உதவிசெய்தது. வீராதி வீரனும், வீழ்ந்தடிபணியும் விசித்திரத்தை உண்டாக்கிற்று. முடிதரித்து நாடாண்டவர்கள், சடை கண்டால், நடு நடுங்கிப், பொன்னும் பொருளும் பிறவும் தந்து அடிமைகளாகவாழவைத்ததற்கு அம்மொழி உதவிற்று. ஆரியர் வாழ்விற்கு, சமஸ்கிருதமே அடிகோலிற்று. ஆரிய ஆதிக்கம் அழிக்கப்பட வேண்டுமானால், சமஸ்கிருதத்துக்குள்ள ஆக்கம் தேய வேண்டும் என்ற உண்மையைப் பார்ப்பனர் உணர்ந்துள்ளனர். அதன்பயனாக அம்மொழிக்கு ஆபத்து என்றால் தமக்கே ஆபத்து வந்ததெனத் துடித்து அதற்குப் பாதுகாப்புத் தேடவும், அந்த மொழிக்குப் பக்கபலமாக உள்ள மொழியையும், வழியையும் ஆதரிக்கவும் முற்படுகின்றனர். தமது ஆதிக்கத்தை வளர்த்துக்கொள்ள அவர்கள் தமது மொழியைப் போற்றுவதும், அதனைப் பரப்பி ஆக்கம்பெற எண்ணுவதும், இயற்கை. ஆனால் இந்த உண்மையை உணராது, பிறர் ஏமாந்து அவர்கள் பின்சென்று வலையில் சிக்குகிறார்களே, அதுதான் ஆச்சரியமாகவும், நமக்குக் கவலை தருவதாகவும் இருக்கிறது.

எதற்காகப் பார்ப்பனர்கள் சமஸ்கிருதத்தைப் போற்றுகின்றனர்? ஏன் அதற்கொரு தனிஉரிமை கேட்கின்றனர்? எதற்காக ரானடே மண்டபத்தில் கூடி, சமஸ்கிருதக்காப்புப் படை திரட்டுகின்றனர்? இதனை எண்ணிப் பார்க்கவேண்டாமா, ஏமாந்துள்ள தமிழர்கள்?

சமஸ்கிருதம், பேசப்பட்டும் எழுதப்பட்டும், பலருக்கும் பயன் பட்டும் இருக்கிறதா? கடை வீதியிலும், படைக்கூடத்திலும், பாராளும் மன்றத்திலும், காராளர் களத்திலும், சாலையிலும் சோலையிலும், சமஸ்கிருதமா உலவுகிறது! கொஞ்சும் குழந்தைகள் பேசுவது அம்மொழியா! கோமளக் காதலியர் குழையும்மொழி அஃதோ! எங்கே இருக்கிறது சமஸ்கிருதம்? என்ன பணியாற்றுகிறது? எவர்க்கு உதவுகிறது? செத்தமொழியன்றோ? சிந்துவாரற்றுச் சாய்ந்த மொழியன்றோ? தமிழர்விரட்டி ஓட்டிய மொழியல்லவா? அப்படிப்பட்ட மொழிக்குத், தம்மாலியன்றவரை முயற்சிசெய்து ஒருவித ஹானியும் ஏற்படாமல் பார்த்துக்கொள்வதாகச் சிலர் கூறுகின்றனரே. மயா

னத்திற்கு சென்ற பிணத்தை "மந்திர உச்சாடனம்" செய்து பிழைக்க வைப்போம் என்கின்றனரே. இதன் கருத்து என்ன? ஏன் இந்தச்சாஸ்திரிகளுக்குஇவ்வளவுஅக்கறை சமஸ்கிருதத்தின் மீது பிறந்தது என்பதைத் தமிழர் எண்ணிப் பார்க்க வேண்டாமா, என்று கேட்கிறோம். நாம் மேலே எடுத்துக்காட்டியபடி, சமஸ்கிருதம், இந்நாட்டிலே பரவி இருந்த வேளையில்தான், பார்ப்பனருக்கு அதிகமான ஆதிக்கம் இருந்தது. வர்ணாஸ்ரம தர்மம் உச்ச நிலையை அடைந்து வாழ்ந்தது.படிப்படியாகச்சமஸ்கிருத ஆக்கம் சாய்ந்தது, அதன் கூடவே சனாதனமும், வர்ணாஸ்ரமும் வீழ்ந்தது. இந்தியாவில்மற்ற இடங்களில், சமஸ்கிருதம் பெற்ற ஆக்கம் அழிக்கப்படவில்லை என்றாலும், நமது தமிழ்நாட்டில், சமஸ்கிருத ஆக்கம் புகுவதற்குப் பட்ட பாடே அதிகம். அதன் படையெடுப்பை எதிர்த்து அநேகம் புரட்சிகள் நடத்தப்பட்டன; இந்தியாவில் சமஸ்கிருதத்தை 'தூரவிலகிநில்" என்று கண்டிப்பாகக் கூறிய இடம் தமிழ்நாடு தான். தமிழ்மொழி ஒன்றுதான், சமஸ்கிருத சல்லாபத்துக்கு இரையாகாது தனித்து நின்று, தன் தனிக் கருத்தைப் பரப்பிற்று. இடை இடையே தமிழர் தளர்ந்த காலத்திலே, தமிழரின் ஏமாளித்தனம் தலைதூக்கிய நேரத்திலே, தமிழ் நாட்டில் சமஸ்கிருதம் தனது கருத்துக்களை மட்டும் தமிழர் வாழ்விலே புகுத்திவிட்டது. அதன் பயனாகவே நமது நாட்டிலும் பார்ப்பனியம் வளர்ந்தது. மொழி, கலையைப் புகுத்தும் வழி. சமஸ்கிருதம் ஆரியமொழி;எனவே ஆரியக் கலையைப் புகுத்த அதுவேவழி. இதுதான் சமஸ்கிருத மொழியைத் தமிழர் பலமாக எதிர்ப்பதற்குக் காரணம். சமஸ்கிருதமொழியை ஏற்றால், அதன் ஆதிக்கத்தை வளர்த்துவிட்டால் அதனிடம் தஞ்சம் புகுந்தால், தமிழர் தமது கலையை இழந்து நிலையையும் இழப்பர் என்று கருதுவதாலேதான், தமிழ்ப் பேரறிஞர்கள் சமஸ்கிருதம் நுழையக்கூடாதுஎனக் கூறி வந்தனர். சமஸ்கிருத மொழியின் துணையினால் புகுத்தப்படும் ஆரிய நாகரிகம், வர்ணாஸ்ரமத்தை வளர்க்கும். வர்ணாஸ்ரமம் வளர்ந்தால், முற்போக்குக் கெட்டு, காட்டுமிராண்டித்தனம் ஏற்படும் எனக் கருதுவதாலேயே, பகுத்தறிவாளிகள், சமஸ்கிருத நுழைவையும், அதன் சாயலான இந்தித்திட்டத்தையும் எதிர்க்கிறார்கள். இதனை உணராது நம்மவரிலேயே சிலர், இந்தியால் கேடு என்ன? எதற்காக அதனை எதிர்ப்பது? என்று கேட்கும் போதுதான் நமக்கு விஷயமறியாது பேசுகின்றனரே என்று ஏக்கம் பிறக்கிறது. ——

## எப்படிச் சகிப்பது?

3-ம் பக்கத் தொடர்ச்சி

அலங்கார மண்டபம், ஒருபரிவாரம், இவ்வளவும்! ஏன்?

மேலதிகாரியின் உத்தரவின்படி நடக்கும், சிப்பந்திகளாக இருப்பது தான் தமிழன் இரத்தம்சிந்திக், குமரனைப் பறி கொடுத்து, சிதம்பரத்தைச் சீரழித்துக் கண்ட பலனா? காங்கிரஸ் இளைஞர்கள்—முற்போக்கு நோக்கமுடையவர்கள்—உண்மையிலேயே, இந்தநிலைமையைக் கண்டு கோபமோ, வெட்கமோ, துக்கமோ, அடையவில்லையா? அவர்களின் மனம்மரத்துவிட்டதா? காங்கிரஸ் மேலிடத்தாரின் சுட்டு விரல் காட்டும் குறிப்பறிந்து நடப்பது தான், வீரர்க்கழகா? விவேகியின் இலட்சணமா? கண்களைவிற்றுச் சித்திரம் வாங்கினால் கை கொட்டிச் சிரிக்காரோ!—என்று பாடிய பாரதியின் பெயர் கூறிடக் கேட்கிறோம், எதற்கும் மேலிடத்துக்கு, 'காவடி' எடுத்து, அங்கு பிறக்கும் 'கட்டளை'க்குக் காத்திருந்து காரியமாற்றும் அளவுக்கு, இங்கு, நமது நாட்டுச் சுயமரியாதையையும், உரிமையையும் பறி கொடுத்துவிட்டு, நாங்கள் 'இந்திய யூனியனிலே' ஓர் உன்னதமான இடம் பெற்றிருக்கிறோம், என்று பேசினால், அரசியல் அறிஞர்கள் கேலி செய்யாரோ?

அவர்களைக் கூடத் தள்ளிவிடுவோம். மேலிடத்தார் தமதுபக்கம் பேசியதையும், அதற்குக்காங்கிரசார் தலையாட்டியதையும், கண்டு, களிப்புடன், கெர்வத்துடன், திரும்பும், ஜெமீன்தாரர்கள், காங்கிரஸ் தீவிரவாதிகளைப் பார்க்கும்போது—கேலி செய்யும் கண்களுடன் பார்க்கும் போது—முகத்தைக்கண்டு, "இதோ! காங்கிரஸ் வீராதி வீரன்! எமக்கு, நஷ்ட ஈடும் தரக்கூடாது என்று ஆர்ப்பரித்தார்! மண்டையில் ஓங்கி அடித்தனர், மேலிடத்தார். வெட்கத்தால் தலையைத் தொங்கவிட்டுக் கொண்டு செல்கிறார்!" என்றுபேசும் கண்களுடன் பார்ப்பரே, அதையுமா சகித்துக் கொள்ள வேண்டும்! இன்னும் எவ்வளவு? இன்னுமெவ்வளவு கொடுமைகளை, அலட்சியப்படுத்தப் படுவதைச் சகித்துக் கொள்ளப் போகிறார்கள் காங்கிரசில் உள்ள தீவிர நோக்கமுடையோர்.

❋

## இரத்தமும் இலாபமும்

20-ம் பக்கத் தொடர்ச்சி

ஜன அமைதியைக் கெடுக்கிறார், அவருடைய சொல்லால், ஒருசமயம் வகுப்புக் கலகம் மூண்டுவிடக்கூடும் என்று பேசி, எதிர்ப்பை அடக்கிவிடுவர்.

தொழிலாளர் தங்கள் குறைகளைக் களையக் கிளர்ச்சி செய்தால், "வகுப்புக் கலகத்தீயை அணைக்கும் காரியத்திலே, காங்கிரஸ் ஈடுபட்டிருக்கும் நேரம் இது. ஆகவே இந்தச் சமயத்திலே, நீவேறு தொல்லை தராதே-உன்கிளர்ச்சி, எங்கே வகுப்புக் கலகத்தைக் கொண்டுவந்து விடுமோ என்று யோசிக்கிறேன். தக்க நடவடிக்கை எடுக்கவேண்டி நேரிடலாம்" என்று பயம் காட்டி, அடக்கிவிட முடிகிறது.

யாரை வேண்டுமானாலும் 'பொது ஜனப்பாதுகாப்புக்காக' வேண்டிச், சிறைப்படுத்தவும் அதிகாரம் தயாராக வைத்துக் கொண்டுள்ளனர். இவ்வளவு 'அமுல்' நடப்பதும், மக்களின் கவனத்துக்கு வரமுடியாதபடி வடநாட்டு வகுப்புக்கலகம், இங்குள்ள காங்கிரஸ் மந்திரிக்கட்சியைக் காப்பாற்றுகிறது — அங்கே கொட்டும் இரத்தம், இங்கே இலாபம் தருகிறது, ஆளவந்தார்களுக்கு.

## நமது நாட்களில்

வைசூரியால் மாண்டமகனைப் பிழைக்க வைப்பதாகச் சொல்லி வத்தலகுண்டுவில் ஸ்திரீ ஒருவர் வீட்டில் ஒரு வருஷ காலம் பூஜைசெய்வதுபோலஒருசாமியார்நடித்தானாம். பிறகு நோக்கம்கைகூடசில சாதுக்களை நேரில் பார்த்து தீர்த்த யாத்திரை தானதருமம் செய்வதாகச் சொல்லிப் போனானாம்.

சென்றவன் வேறு ஒரு ஊரில் இறந்தவன் அரை உருவம் பிழைத்து விட்டதாகவும் ரூ. 5500 தேவையென்றும் கோரி வேறு விலாசம் தந்துதொகையைப் பெற்றானாம். கொஞ்சநாள் கழித்து அரை உருவம் முக்காலாகி விட்டதாகச் சொல்லி மேலும் ரூ. 1000 கேட்டானாம். நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாமென அந்த அம்மாள் எழுதியதாகவும் அதை நம்பி வந்தவன் வத்தலகுண்டு போலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டான். போலீஸார் புலன் விசாரித்து வருகின்றனர்.

# இரத்தமும் இலாபமும்

—✻—

கோவையில், சில மில் முதலாளிகள், தொழிலாளரின் கோரிக்கைகளுக்கு இணங்கினால், தங்களால் இலாபத்தைப் பெற முடியாது. ஆகவே, மில்களை மூடிவிட்டோம் என்று கூறுகிறார்கள். இதற்குமுன்பு பெற்ற கொழுத்த இலாபம், தொழிலாளியின் உழைப்பால் கிடைத்தது தானே! நன்றி கெட்டதனமாக, ஏழையின் வயிற்றிலடிக்க இந்தக் காரியம் செய்கிறாயே, இது தருமமா? என்று, ஏழைக்காகவே ஏற்பட்ட சர்க்கார், கேட்கவில்லை. சரி, உன்னால் ஒழுங்காக நடத்த முடியாவிட்டால், நீ, மில்களைச் சர்க்காரிடம் கொடுத்துவிடு, நாங்கள் நடத்துகிறோம் என்று கூறி, மில்களையும் எடுத்து நடத்தவில்லை.

அந்த மில்களிலே, வேலை இல்லை என்றால் என்ன? கவலைப்படாதே! இதோ உனக்காகப் புதிய தொழில்கள், இங்கே உள்ளன. வா! பாடுபடு! பலனைப்பெறு! என்றும் கூறவில்லை. ஏழைகள் சர்க்கார், ஏழைகளுக்காக எதையும் செய்யாததைப்பற்றி, ஏழை, ஏதாவது, கேட்கமுடிகிறதா? இல்லை!

* * *

விற்பனைவரி விகிதத்தை உயர்த்தச் சென்னை சர்க்கார் தீர்மானித்திருக்கிறது. பெருள்களின்மீது வரி விதிப்பது ஏழைகளைத்தானே பாதிக்கும், ஏற்கனவே இந்த வரியினால் கஷ்டப்படுகிறார்களே, இன்னமும் உயர்த்துவது அழகா, என்று சட்டசபையிலே கேள்வி கேட்டார்கள். மந்திரி கோபால் ரெட்டியார், விற்பனை வரியால் மக்களுக்குக் கஷ்டம் என்று இங்கே உள்ள எதிர்க்கட்சிக்காரர்கள் தான் பேசுகிறார்கள், நாட்டிலே, மக்கள், இந்த விற்பனைவரியை எதிர்க்கவோ, கண்டிக்கவோ இல்லையே, என்றார். பல சங்கங்கள் கண்டித்தன! அவர் அதைக் கூறவில்லை. முன்பு, விற்பனைவரியை ஆச்சாரியார் புகுத்தியபோது, நாடெங்கும் எதிர்ப்பும் கண்டனமும் கிளம்பின. அவர் அதைப் பொருட்படுத்தவில்லை. இப்போதும், எதிர்ப்பும் கண்டனமும் பயன் தராது என்று தான் மக்கள், சும்மா இருந்துவிட்டார்கள் போலும்! ஏழைகள், தாங்களாகத் தேடிக்கொண்ட தொல்லையைத் தாங்களே அனுபவிப்பதுதவிர வேறு, வழி இல்லையே!!

* * *

பஞ்சமா பாதகங்களை ஒழித்துப் பாட்டாளியை வாழவைக்கப் போகிறோம் என்றுசொன்ன சர்க்காரிலே, ஏழையின் வாழ்வைக் கெடுக்கும் கிண்டி குதிரைப்பந்தயம் எனும் சூதாட்டத்தை ஒழிக்கப் போவதில்லை என்று டாக்டர் சுப்பராயன் கூறிவிட்டார். காந்தியார், தமது அரிஜன் பத்திரிகையிலே கூடக் குதிரைப்பந்தயத்தைக கண்டித்து எழுதினார். மந்திரி அதை மதிக்கவில்லை! காங்கிரஸ் சட்டசபைக் கட்சியும் இதுபற்றிக், கவனம் செலுத்தவில்லை. ஏழைகள், என்ன செய்வர்! அவர்கள் 'ஓட்' போட்டு, M. L. A., ஆக்கிவைத்த 'பெரிய மனுஷர்கள்' ஊரிலே உலவிக்கொண்டுதான் இருக்கிறார்கள். எங்களிடம் ஓட்டுவாங்கிக் கொண்டுபோய், எங்களை வாழவைக்கும் முறை இதுதானா ஐயா! என்று கேட்க, ஏழைக்கு முடியவில்லை.

* * *

சில மாதங்களுக்கு முன்பு, M. L. A., பதவி பெறக்கூடிய அளவு, மக்களிடம் செல்வாக்குப் பெற்றிருந்த, சிதம்பரம் சகஜானந்தம், ஈரோடு ஈஸ்வரன், காஞ்சிபுரம் குப்புச்சாமி போன்ற M.L.A.,க்கள், முனிசிபல் தேர்தலில் தங்கள் வார்டுகளிலே, தோற்றுப்போன காரணம் என்ன? ஏன் அவர்களின் செல்வாக்கு இவ்வளவு விரைவிலே கருகிவிட்டது, என்று கேட்கப், பொது மக்களால் முடியவில்லை.

* * *

ஏன், இவைபோன்றவைகளைக் கேட்கப் பொதுமக்களால் முடியவில்லை?

பொதுமக்கள் கண்ணுக்கும் கருத்துக்கும், இவைகள் சாதாரண, சாமான்ய விஷயங்களாகப் படும்படி, வடநாட்டிலே நடைபெறும் இரத்தக்களறி பற்றிய விஷயமும், அதையொட்டிக், கொதிப்பூட்டும்கட்டுரைகளும், எழுதிப், பத்திரிகைகளை நிரப்பி விடுகிறார்கள்.

அதனாலே, இங்கு மக்கள், தங்கள் நிலைமை, காங்கிரஸ் சர்க்கார் வந்ததால், முன்னேறவில்லை, மாறாக, முன்பு இருந்ததைவிடக் கஷ்டம் அதிகரித்திருக்கிறது என்பதை உணரவும், சிந்திக்கவும், பரிகாரம் தேடவும், நேரம் இல்லை, மனதிலே திடமும் இல்லை. வடநாட்டு இரத்தவெறிச் செய்தியைத் தங்களுக்குச் சாதகமாக்கிக்கொண்டு, காங்கிரஸ் சர்க்கார், பொதுமக்களின் சீற்றத்திலிருந்து தப்பித்துக் கொண்டு வருகிறது.

கல்லும் மண்ணும் கலந்த ரேஷன் அரிசி, கால்வயிற்றுக்கும் போதவில்லையே! இந்த இலட்சணமான ஆட்சியை என்னென்னமோ பிரமாதமாகக்கூறி, வரவேற்றார்களே! எங்கே அவர்கள்? கேட்போம், இதுபற்றி என்று மக்கள் எண்ணுவர்; ஆனால் அன்று பத்திரிகையைப் பிரித்ததும், இன்ன ஊரில்மூண்ட வகுப்புக்கலகத்தால் இடிந்தவீடு 70, கொளுத்தப்பட்ட குடிசைகள் 200, வெட்டப்பட்டவர்கள் 300 என்று ஒருபக்கம், கொட்டை எழுத்திலே இருக்கும்! அதைப்பார்த்தானபிறகு, ரேஷன் அரிசி பற்றிய நினைப்பு மறையுமல்லவா!

இந்த 'வகுப்புக்கலகம்' ஏராளமான பொருள் நஷ்டத்தை, உயிர் நஷ்டத்தைத், தந்துவிட்டது. ஆனால் இதையும், தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு, தங்கள்மீது கிளம்பக்கூடிய, எதிர்ப்பைத் தடுத்துக் கொள்ள முடிகிறது, காங்கிரஸ்காரரால்! ஆனால், எவ்வளவு நாட்களுக்கு?

இந்த வகுப்புக்கலவர நிலைமையினாலேதான், காங்கிரசாட்சியினால், இந்த மாகாணத்துக்கு விளைந்துள்ள கேடுகளைப், பொதுமக்களிடம் எடுத்துக்கூறப் பலர் முன்வரவில்லை. யாராவது, எந்தத் தவறையாவது, எடுத்துக்காட்டினால், அவர் பொது

(19-ம் பக்கம் பார்க்க)

Edited Printed Published by C. N. Annadurai, M. A., at "Dravida Nadu" Press, 817—819 Hodgsonpet Conjeeveram.